# பரிபூரண ஜீவன்

# PARIPOORANA JEEVAN

## ஆசீர்வாதமான குடும்பம்



கர்த்தர் சீயோனிலிருந்து
உன்னை ஆசீர்வதிப்பார் (சங்கீதம் 128:5)


THE TAMIL DISTRICT COUNCIL OF THE SIAG

March - April 2023
Volume : 63

ஆண்டு சந்தா ₹ 120/-
Issue : 2

## 56-வது மத்திய வாலிபர் முகாம், மதுரை-2023









## Evangelism and Church Planting Seminar - Covai and Trichy Zone




ஆசிரியரிடமிருந்து........!

# ஆசீர்வதிக்கப்பட்ட குடும்பம்



நமது கர்த்தர் குடும்பத்தை ஏற்படுத்தி அதை ஆசீர்வதித்தார் (ஆதி.1:27,28). ஒரு ஆசீர்வதிக்கப்பட்ட குடும்பத்திற்கான அனைத்து ஆலோசனைகளையும் வேதத்தில் நமக்கு தந்திருக்கிறார். குடும்பத்தை முக்கியப்படுத்தி எழுதப்பட்டுள்ள 127 மற்றும் 128ம் சங்கீதங்களை தியானிப்பது ஆசீர்வாதத்தை நமக்குக் கொண்டு வரும். இவ்விரு சங்கீதங்களும் தேவனோடு சரியான உறவு, மகிழ்ச்சியுள்ள திருமண வாழ்க்கை மற்றும் குடும்பத்திற்குத் தேவன் தரும் ஆசீர்வாதங்களைக் குறித்து நமக்குப் போதிக்கிறது. தேவன் நமது குடும்பங்களை இவ்வசனங்களின் மூலம் ஆசீர்வதிப்பாராக.

## 1.குடும்பத்தின் அஸ்திபாரம்

நமது குடும்பத்தைக் கட்டுகிறவர் கர்த்தர். தேவன் நமது குடும்பத்தை ஆசீர்வதிக்க, நாம் அவரது வசனத்தின்படி சரியான அஸ்திபாரம் போடுவது மிகவும் அவசியம்.

### A) கர்த்தருக்குப் பயப்படும் பயம் (FEAR OF GOD)

சங்கீதம் 128:1,4 வசனங்கள் கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷன் பாக்கியவான் என்று கூறுகிறது. நல்ல குடும்பம் உண்டாயிருக்க, குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் தேவனுக்குப் பயந்து வாழ வேண்டும். பெற்றோர்கள் தங்கள் வாழ்க்கையிலும், வார்த்தையிலும் தேவ பயத்தைக் காண்பித்துத் தங்கள் பிள்ளைகளுக்கும் கற்றுக்கொடுக்க வேண்டும். தேவன் பரிசுத்தமுள்ளவர், நீதியுள்ளவர் என்பதையும் பாவத்தின் விளைவுகள் கடுமையானது என்பதையும் ஒவ்வொருவரும் அறிந்திருக்க வேண்டும். தேவ பயமில்லாத வீட்டில் தேவ ஆசீர்வாதம் தங்காது. தீமையை வெறுப்பதே கர்த்தருக்குப் பயப்படும் பயம் (நீதி.8:13). மறைவான, துணிகரமான பாவங்கள், பொய்கள், கெட்ட வார்த்தைகள், அசுத்தமான புஸ்தகங்கள் இவைகளை நாம் வீட்டிலிருந்து அகற்ற வேண்டும். இப்படி உங்கள் குடும்பத்திலுள்ள யாவருக்கும் கர்த்தருக்குப் பயப்படும் பயம் உண்டா?

### B) கர்த்தரின் வழியில் நடத்தல் (FOLLOW THE WAYS OF GOD)

கர்த்தரின் வழியில் நடக்கிறவன் எவனோ அவன் பாக்கியவான் என்று சங்கீதம் 128:1 கூறுகிறது. இது கர்த்தருடைய வசனத்திற்குக் கீழ்படிந்து வாழ்வதைக் குறிப்பிடுகிறது. பிள்ளைகள் தங்கள் பெற்றோர் தேவனை நேசிக்கிறார்களா? அவரைச் சேவித்து அவருக்குக் கீழ்ப்படிந்து வாழ்கிறார்களா? என்பதைப் பார்க்க விரும்புகிறார்கள். நாம் குடும்பமாக வேதத்தை வாசித்து ஜெபித்து அவர் வழிகளை அறிந்து அதில் நடக்கத் தீர்மானிக்க வேண்டும். நீங்களும் உங்கள் குடும்பத்தாரும் தேவனை அனுதினமும் தேடி அவருக்குக் கீழ்ப்படிகிறீர்களா?

### C) கர்த்தர் மேல் விசுவாசம் (HAVE FAITH IN GOD)

கர்த்தர் வீட்டைக் கட்டாராகில் அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா

(சங்.127:1) என்று வேதம் கூறுகிறது. சங்.127:1,2,3, வசனங்களில் மூன்று முறை 'விருதா' என்ற வார்த்தை வருகிறது. தேவன் இல்லாத அனைத்து காரியமும் வீணானது. அர்த்தமற்றது. ஆகவே தேவன் நமது குடும்பத்தை ஆசீர்வதிக்க அவரையே எப்பொழுதும் நோக்கிப் பார்த்து அவர்மேல் முழு நம்பிக்கை வைக்க வேண்டும். அவரை முற்றிலும் சார்ந்திருந்து அவரிடத்தில் ஜெபிக்க வேண்டும். நமது குடும்பத்தார் யாவரும் தங்கள் படிப்பு, வேலை இவைகளைப் பார்க்கிலும் தேவனோடு தங்களுக்கு உள்ள உறவுக்கு அதிகமான முக்கியத்துவமும், முன்னுரிமையும் கொடுக்க வேண்டும். ஏனெனில் "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவரது நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக்கொடுக்கப்படும்" என்று இயேசு சொன்னார் (மத்தேயு 6:33). இயேசு நம்முடைய வாழ்க்கையில் முதலாவதாகவும், மையமாகவும், அஸ்திபாரமாகவும் இருப்பாரென்றால் நமது குடும்பம் ஆசீர்வதிக்கப்படும்.

## 2.குடும்பத்தின் அழகு

ஒரு குடும்பத்தின் அழகு அந்தக் குடும்பத்தின் அங்கத்தினர்கள் தங்களுக்குத் தேவன் தந்த பொறுப்புகளையும் கடமைகளையும் சரியாக நிறைவேற்றுவதில் இருக்கின்றது. இது குறித்து சங்கீதம் 127 & 128 கூறும் காரியங்களைப் பார்ப்போம்.

### A) கணவன் குடும்பத்தின் தலை (HEAD)

ஒரு குடும்பத்தில் தகப்பன் அல்லது கணவன் தலைவராக இருக்கிறார். அவர் கர்த்தருக்குப் பயந்து அவர் வழியில் நடக்க வேண்டும் (128:1). ஒரு சிறந்த மாதிரியாக எல்லாவற்றிலும் விளங்க வேண்டும். குடும்பத்தை நன்றாக நடத்த தெய்வீக ஞானத்தைக் கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். தன் குடும்பத்திற்கு ஒரு நல்ல ஆசாரியனாக இருந்து வேத வசனத்தைப் போதித்துப் (உபா.6:5-9), பிள்ளைகளைக் கர்த்தருக்கேற்ற போதனையில் வளர்க்க வேண்டும். (எபே.6:4; ஆதி.18:19). மனைவியை நேசித்து, கனப்படுத்தி, காப்பாற்ற வேண்டும் (எபே.5:25; 1பேதுரு3:7). தன் மனைவியுடன் எப்பொழுதும் இசைந்திருந்து அவளை உலகத்திலேயே சிறந்த நபராகக் கருதி நேசிக்க வேண்டும் (ஆதி.2:24; மத்.19:3-6; எபே.5:31).

மேலும் கணவன் தன் கைகளின் பிரயாசத்தினால் சாப்பிட வேண்டும் என்று இந்த சங்கீதம் கூறுகிறது (128:2). கணவன் தன் குடும்பத்தினரின் சரீர, ஆவிக்குரிய தேவைகளையும் சந்திக்கிறவராகக் காணப்பட வேண்டும். தன் குடும்பத்தை நன்றாகக் கவனிக்க வேண்டும் (1தீமோ.5:8). இதை படித்துக்கொண்டிருக்கும் என் அருமையான சகோதரர்களே, உருப்படியான வேலை செய்து, உண்மையாய் அதை செய்து குடும்பத்தை ஆதரிக்க வேண்டியது உங்களுடைய பொறுப்பு. தகப்பனாகிய நீங்கள், கணவராகிய நீங்கள் அந்த பொறுப்பிலிருந்து தவறுவீர்களானால் உங்கள் குடும்பம் சிதறிவிடுமே! நீங்கள் கர்த்தருக்கு கணக்கு கொடுக்கவேண்டும். கணவர் ஒருவேளை நோய்வாய்பட்டு அல்லது ஊனமுற்று வேலை செய்யமுடியாத நிலையில் இருந்தால் அது வேறே காரியம். ஆனால் சுகமிருந்தும், பெலமிருந்தும் வேலை செய்ய மனமில்லாமல் இருந்தால் அதுதவறு. குடும்பத்தை ஆதரிப்பது கணவரின் பொறுப்பாகும் என்பது தேவனுடைய திட்டமாகும். அதனாலே மனைவி வேலை செய்யக்கூடாது என்று நான் சொல்லவில்லை, வேதமும் போதிக்கவில்லை. மனைவி வேலை செய்தாலும், குடும்பத்தை ஆதரிக்கும் முக்கியமான பொறுப்பு கணவருக்கு உரியது.

### B) மனைவி குடும்பத்தின் இருதயம் (HEART)

ஒரு குடும்பத்தில் தாய் அல்லது மனைவி இதயமாக இருக்கிறாள். ஒரு சரீரத்தின் சிறப்பான செயல்பாட்டிற்கு தலையும் இருதயமும் எவ்வளவு முக்கியமோ, அதைப்போலக் குடும்பத்திலும் கணவன் மனைவி இருவரின் சிறந்த செயல்பாடு

அவசியம். ஒரு குடும்பத்தில் மகிழ்ச்சி, துடிப்பு, புத்துயிர் ஆகியவற்றைக் கொண்டு வருவது தாய். ஒரு வீட்டுக்கு ராணி யார்? மனைவிதான், தாய்தான். அவள் தன் வீட்டோரங்களில் கனிதரும் திராட்சைச் செடியைப்போல இருக்க வேண்டும் (சங்.128:3). மனைவியின் பிரதான கடமை வீட்டிற்குள் இருக்கிறது. வெளியே சென்று வேலை செய்து சம்பாதிப்பது தவறல்ல. ஆனால் தன் வீட்டுப் பொறுப்புகளைச் சரியாகக் கவனிக்காமல் அப்படி செய்யும்போது வீட்டின் மகிழ்ச்சியை இழக்க நேரிடும். அதனாலே மனைவிமார் வீட்டுக்குள்ளேயேதான் இருக்க வேண்டும், வெளியே வேலை செய்யக்கூடாது, சமூகசேவை தேவையில்லை, சபை ஊழியம் தேவையில்லை என்று வசனம் சொல்லவில்லை. தாராளமாய் சபை ஊழியம், சமூகசேவை, வெளியே வேலை அனைத்தையும் செய்யலாம். ஆனால் வீட்டை உதாசீனம் செய்யாதீர்கள், உங்கள் குடும்ப பொறுப்பை உதாசீனம் செய்யாதீர்கள். அது கர்த்தரின் ஒழுங்குக்கு மாறாக செல்வதாகும்.

மேலும் மனைவி தன் புருஷனை நேசித்து அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும். (எபே.5:23;1பேதுரு 3:1;தீத்து2:4). தன் பிள்ளைகளுக்கு தேவ அறிவையும், தெய்வீக மதிப்பீடுகளையும் கற்றுக் கொடுக்க வேண்டும் (1 தீமோ.1:5; 3:15). புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள் (நீதி.14:1). அவள் குடும்பத்திற்கு அழகையும், ஒழுங்கையும் அமைதியையும் கொண்டு வருகிறாள் (நீதி.31: 10-31).

### C) பிள்ளைகள் கர்த்தருடைய சுதந்திரம் (HERITAGE)

பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம், அவரால் கிடைக்கும் பலன் (சங்.127:4). அவர்கள் ஒலிவமரத்தின் நிழலில் வளரும் ஒலிவமரக் கன்றுகள் (சங்.128:4). இது எதைக் காட்டுகிறது? பாதுகாப்பைக் காட்டுகிறது. இன்றைக்கு அநேக வீடுகளிலே குடும்பங்களிலே பாதுகாப்பு உணர்வு கிடையாது. பிள்ளைகளுக்குத் தேவையானது பாதுகாப்பு. ஒரு வீட்டிலே அம்மாவும், அப்பாவும் நாயும் பூனையும் போல சண்டை போட்டால், பிள்ளைகளுக்கு எப்படி பாதுகாப்பு உணர்வு இருக்கும்?ஆகவே பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு நல்ல பாதுகாப்பான சாதகமான ஆவிக்குரிய சூழ்நிலையை உருவாக்கித் தர எல்லா விதத்திலும் முயற்சிக்க வேண்டும். பிள்ளைகள் பலவான் கையிலுள்ள வல்லமையான, சக்தி நிறைந்த அம்புகள் (சங்.127:5). அவர்கள் சரியான பாதையில் செல்ல அவர்களை பெற்றோர்கள் கவனமாக கையாள வேண்டும்.

மேலும் பிள்ளைகளாயிருக்கிறவர்கள் தங்களுக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும் பூமியிலே தங்கள் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும் தங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து அவர்களைக் கனப்படுத்த வேண்டும் என்று வேதம் கூறுகிறது (எபே.6:1-3; யாத்.20:12).

## 3.குடும்பத்தின் ஆசீர்வாதங்கள்

நாம் தேவனுடைய வழிகளில் நடக்கும்போது பல ஆசீர்வாதங்களை இந்த இரண்டு சங்கீதங்களில் தேவன் நமக்கு வாக்குப்பண்ணியுள்ளார். "கர்த்தர் சீயோனிலிருந்து உன்னை ஆசீர்வதிப்பார்" (சங்.128:5) என்று வசனம் கூறுகிறது. ஏன் சீயோன் இங்கு குறிக்கப்படுகிறது? சீயோன் என்பது கிருபையைக் காட்டுகிறது. "சீனாய் மலை" நியாயப்பிரமாணத்திற்கு அடையாளமாயிருக்கிறது. "சீயோன் மலை" கிருபைக்கு அடையாளமாயிருக்கிறது. குடும்ப வாழ்விலே கிருபையாக தேவன் நமக்கு ஆசீர்வாதங்களை தருகிறார்.

### A) சமாதானம் (PEACE)

இன்று அநேகர் கடினமாக உழைத்தும் வருத்தத்தின், துன்பத்தின் அப்பத்தை சாப்பிடுகிறார்கள். அவர்கள் மனதில் சமாதானமும் மகிழ்ச்சியும் இல்லை (127:3). ஆனால் நாம் கிறிஸ்துவை நம் வாழ்வின் மையமாக வைத்து வாழும் போது எல்லா புத்திக்கும் மேலான ஒரு தேவ சமாதானத்தை தேவன் நமக்கு தருகிறார் (பிலி.4:7).

நமக்கு நிம்மதியான பயமும் கவலையும் இல்லாத தூக்கத்தைத் தருகிறார் (127:3). நாம் தேவனைச் சார்ந்து அவரை நம்பிக் காரியங்களைச் செய்யும்போது, நமக்குள் ஒரு பூரண சமாதானம் உண்டாயிருக்கும் (ஏசாயா 26:3) என்று வேதம் கூறுகிறது. நீ படுக்கும்போது பயப்படாதிருப்பாய்; நீ படுத்துக் கொள்ளும்போது உன் நித்திரை இன்பமாயிருக்கும் (நீதி. 3:24).

**B) பாதுகாப்பு (PROTECTION)**

கர்த்தர் நகரத்தைக் காவாராகில் காவலாளர் விழித்திருக்கிறது விருதா என்று வேதம் கூறுகிறது (சங்.127:2). நமக்கு மனிதனின் பாதுகாப்பு மட்டும் உதவாது. தேவனுடைய பாதுகாப்பு மிகவும் அவசியம். பல இடங்களில் காவலர்கள் இருந்தபோதும் திருட்டு, கொள்ளை, கொலை இவைகளைக் குறித்துத் தினமும் கேள்விப்படுகிறோம். ஆனால் நம்முடைய கர்த்தரோ நம்மைத் தூங்காமல் உறங்காமல் காக்கிறவர் (சங்.121:4). அவர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார். அவர் உன் போக்கையும் வரத்தையும் காப்பார் (சங்.121:7,8). உன்னைச் சூழ தேவ தூதர்கள் பாளயமிறங்கிக் காப்பார்கள் (சங்.34:6).

**C) நன்மையும், செழிப்பும் (PROSPERITY).**

உன் கைகளின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய்; உனக்குப் பாக்கியமும் நன்மையும் உண்டாயிருக்கும் என்று சங்.128:2-ல் தேவன் வாக்குப்பண்ணியுள்ளார். உங்கள் பிரயாசத்தின் பலனை சத்துரு கொண்டு செல்லாதபடிக்கு தேவன் உங்கள் பொருளாதாரத்தை ஆசீர்வதித்து எல்லாத் தேவையற்ற செலவுக்கும் விலக்கி காப்பார். கர்த்தர் உனக்கு தமது நல்ல பொக்கிஷ சாலையாகிய வானத்தைத் திறப்பார். நீ அநேகம் மக்களுக்குக் கடன் கொடுப்பாய். கர்த்தர் நீ கையிடும் எல்லா வேலையிலும் உனக்கு ஆசீர்வாதம் கட்டளையிடுவார் (உபா.28:8,12).

**D) நீடித்த ஆயுசு (PROLONGED LIFE)**

சங்கீதம் 128:6ல் நீ உன் பிள்ளைகளின் பிள்ளைகளைக் காண்பாய் என்று வேதம் கூறுகிறது. நீடித்த ஆயுசு தேவனுடைய ஆசீர்வாதத்திற்கும் அவருடைய கிருபைக்கும் அடையாளமாக இருக்கிறது. யோபு நான்கு தலைமுறையாகவும், யோசேப்பு மூன்று தலைமுறையாகவும் தங்கள் பிள்ளைகளின் பிள்ளைகளைக் கண்டதுபோல நீங்கள் தேவனுக்கு பயந்து அவருக்குக் கீழ்ப்படிந்து தேவன் உங்களுக்கு நியமித்திருக்கிற பூரண வாழ்வை வாழ கிருபை அருளுவார் (யோபு 42:16; ஆதி.50:23).

**E) நோக்கமுள்ள வாழ்வு (PURPOSEFUL LIFE)**

"நீ ஜீவனுள்ள நாளெல்லாம் எருசலேமின் வாழ்வைக் காண்பாய். இஸ்ரவேலுக்கு உண்டாகும் சமாதானத்தையும் காண்பாய்" (சங்.128:5,6). நானும், என் குடும்பமும், என் பிள்ளைகளும் என்று வாழ்வது தேவனின் நோக்கமல்ல. நம்முடைய குடும்ப வாழ்வின் மூலமாய் கர்த்தரின் திட்டம் நிறைவேற வேண்டும். அவருடைய இரட்சிப்பின் திட்டம் நம் குடும்பத்தின் மூலம் நிறைவேற வேண்டும். மற்றவர்கள் அவரைப்பற்றி அறியவேண்டும். அவருடைய சபை வளரவேண்டும். இதைத் தான் 5,6 ஆகிய வசனங்களிலே இஸ்ரவேல், எருசலேம் என்று கூறுகிறார். குடும்ப வாழ்வுக்கும், எருசலேமுக்கும், இஸ்ரவேலுக்கும் என்ன சம்பந்தம்? குடும்ப வாழ்வின் மூலமாக எருசலேம் வாழும், இஸ்ரவேல் கட்டப்படும். நமக்கு சபை கட்டப்படும் என்று இதை நாம் பொருள்படுத்தலாம். ஆகையால் என் அருமையான சகோதரரே, சகோதரிகளே உங்கள் குடும்ப வாழ்வு மற்றவர்களின் ஆத்தும இரட்சிப்புக்காக, சபையின் நல்வாழ்வுக்காக பயன்பட வேண்டுமே! இப்படிப்பட்ட குடும்ப வாழ்வை விரும்புவோம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

**Rev. Dr. ஜெரி டேனியல்**
(ஆசிரியர், பரிபூரண ஜீவன்)
மண்டல தலைமைப் போதகர், திருச்சி தெற்கு மண்டலம்.



கர்த்தரின் ஈவாகிய இனியமண வாழ்வு-3

# பூத்துக்குலுங்கும் திராட்சத் தோட்டம் கெடுக்கப்படாமல் காப்போம்


**Rev. Dr.T.S. ராஜசேகர்**

அகில இந்திய ஏ.ஜி பொது நிர்வாகக் குழு உறுப்பினர்


கர்த்தரின் ஈவாகிய இனிய மணவாழ்வை எப்பொழுதும் பூத்துக் குலுங்கும் திராட்சத் தோட்டமாகப் பாதுகாப்பது எப்படி என்று விவரிப்பது, உன்னதப்பாட்டு நூலின் இரண்டாவது பாடல். இப்பாடலின் முதல்பகுதியாகிய உன்.2:8-17-ல் இருந்து நமது மணவாழ்வின் சுமுகமான நாட்களில் எவ்வாறு நடந்துகொண்டால் பூத்துக்குலுங்கும் திராட்சத் தோட்டம் கெடுக்கப்படாமல் காக்கப்படும் என்று கற்றுக் கொண்டோம். இந்த இதழில் இரண்டாம் பாடலின் இரண்டாம் பகுதியாகிய உன்.3;1-5 ல் இருந்து மணவாழ்வில் பிணக்குகள் தோன்றி மனவேற்றுமையாக மாறிவிடும் கடினகாலங்களில் எவ்வாறு நடந்து மணவாழ்வைப் பூத்துக் குலுங்கும் திராட்சத் தோட்டமாகவே காத்துக் கொள்ளவேண்டும் என்று கற்போம்.

3:1 இரவில் என் படுக்கையில் என்னுயிர் நேசரைத் தேடினேன்!
நான் தேடினேன்! அவரோ காணப்படவில்லை.
3:2 நான் இப்பொழுதே எழுவேன்; நகர் முழுவதும் தேடுவேன்;
தெருக்களிலும், நாற்சந்திகளிலும் என்னுயிர் நேசரைத் தேடுவேன்.
நான் தேடினேன்! அவரோ காணப்படவில்லை.
3:3 நகரைச் சுற்றும் காவலர்கள் என்னைக் கண்டனர்;
"என்னுயிர் நேசரைக் கண்டீர்களா?" எனக் கேட்டேன்.
3:4 நான் அவர்களைக் கடந்ததுமே, என்னுயிர் நேசரைக் கண்டேன்,
அவரைஉறுதியாகப் பிடித்துக் கொண்டேன்.
என் தாய்வீட்டிற்கு, என்னைக் கருவாக சுமந்தவளின் அறைக்கு
அழைத்துச் செல்லும்வரை அவரை விடவில்லை.
3:5 எருசலேமின் இளம்பெண்களே!
கலைமான்கள் மீதும், வனத்தின் பெண்மான்கள் மீதும் ஆணை!
அதற்கான நேரம் வரும் வரை
நேசத்தைத் தட்டிஎழுப்பாதீர்! தூண்டிவிடாதீர்.

மனித வாழ்வில் மேடுபள்ளங்கள் இருப்பது இயற்கையின் நியதியாக இருப்பது போன்று மணவாழ்விலும் சுமுகமான காலங்களும், கடினகாலங்களும் வரும் என்பதைக் கணவனும் மனைவியும் மணவாழ்வின் துவக்கத்திலேயே உணர்ந்து கொள்ளவேண்டும். ஆனால், சூழ்நிலைகள் எப்படியாக மாறினாலும், கணவன் மனைவியைத் தன் பிரியமாகவும், மனைவி கணவனைத் தன் நேசராகவும் கருதும் மனப்பான்மை என்றும் தொடரவேண்டும் என்ற தீர்மானத்தை மணவாழ்வின் துவக்கத்திலேயே கணவனும் மனைவியும் எடுக்கவேண்டும். காலங்கள் செல்லச் செல்ல இருவரும் இத்தீர்மானத்தை அடிக்கடி நினைவு கூர்ந்து உறுதிசெய்து கொள்ளவேண்டும். இதுவே, மணவாழ்வின் கடினகாலங்களை வெற்றியாகக் கடந்து செல்ல உதவும் காப்பீடு (Insurance).

மனிதவாழ்வின் அழுத்தங்களும், உரசல்களும், மணவாழ்வைப் பாதித்துவிடாதபடி, எபேசியர் 4:26-ல் கூறப்பட்டுள்ள கட்டளையின்படி (வெறும்

ஆலோசனை அல்ல) சூரியன் மறைவதற்குள் எரிச்சலைத் தணியச் செய்யவேண்டும். அப்படிச் செய்யாமல் எரிச்சலோடேயே படுக்கைக்குச் சென்றால், தன் வாழ்க்கைத் துணை அருகிலேயே படுத்திருந்தாலும், அவர்கள் இருவரும் பிரியமும், நேசருமாக இராமல் ஏதோ அந்நியர்களாகவே அருகில் படுத்திருப்பர். இச்சூழ்நிலையில் இருவருமே தங்கள் சுயகௌரவத்தையே பிடித்துக் கொண்டிராமல், என் பிரியத்தை, என் நேசரை மீண்டும் கண்டுபிடிக்கவேண்டும் என்ற உணர்வு இருவரிலும் மேலோங்கவேண்டும். அப்படியிராமல் சுயகௌரவத்தைப் பிடித்துக் கொண்டு அடுத்தவர் இறங்கி வரட்டும் என்று காத்திருப்பதால் பாதிக்கப்படுவது கணவன் மனைவி இருவருமே. அதோடு, கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளாமல் இருப்பது பிள்ளைகளின் மனதைக் காயப்படுத்துவதோடு, அக்காயங்களின் பாதிப்பு, அவர்களது மணவாழ்விலும் தொடரும் என்பதைப் பெற்றோர் உணரவேண்டும்.

எனவே, தங்களையும் பாதித்துத் தங்கள் பிள்ளைகளையும் பாதிக்கும் மனவேற்றுமையைச் சரிசெய்யக் கணவன், மனைவி இருவரும் தீர்மானிக்க வேண்டும். ஒருவர் தன் சுயகௌரவத்திலேயே பிடிவாதமாக இருப்பதையும், மாறாக உறவைச் சரிப்படுத்த ஆயத்தமாக இருப்பதையும் அடுத்தவர் உணர்ந்து கொள்ளமுடியும். அடுத்தவர் சுயகௌரவத்திலேயே பிடிவாதமாக இருப்பதால் நானும் என் சுயகௌரவத்தைப் பிடித்துக் கொள்வேன் என்றிருப்பது இருவரையும் பாதிக்கும். அதுபோலவே, ஒருவர் உறவைச் சீரமைக்க ஆயத்தமாக இருப்பதை உணரும்போது இன்னமும் இறங்கிவரட்டும் என்று தாமதிப்பதும் இருவரையும், அதன் விளைவாகப் பிள்ளைகளையும் பாதிக்கும். ஆகவேதான், அந்த இரவிலேயே உறவைச் சீரமைக்க முயற்சி எடுக்கப்படுகிறது.

இரவில் தலைவி தன் நேசரைத் தேடியலைந்ததாக இப்பாடலில் கூறப்படுவது, கணவன் மனைவி இடையேயுள்ள மனவேற்றுமையைச் சரிசெய்ய எந்தத் தியாகத்தையும் செய்வதற்கு சுயகௌரவம் தடையாக இருக்கக்கூடாது என்பதை சுட்டிக்காட்டுகிறது. பலநேரங்களில் இப்படி இறங்கி வந்து உறவைச் சீரமைப்பது அந்நியர் போன்று நடந்துகொண்ட கணவனும் மனைவியும் மீண்டும் நேசரும் பிரியமுமாகத் தொடர வழிவகுக்கும். ஆனால், சிலநேரங்களில் இந்த முயற்சி பலனளிக்காவிட்டால் அடுத்தகட்ட முயற்சிகளையும் எடுக்க வேண்டும்.

இப்பாடலில் தலைவி தன் சுயகௌரவத்தைப் பாராமல் நகர் முழுவதும் தேடியும் தன் நேசரைக் காணாததால், அடுத்த முயற்சியாக நகரக் காவலர்களின் உதவியை நாடுகிறாள். சங்கீதம்.127:2-ல் கூறப்பட்டுள்ளபடி, நகரக்காவலர்களின் முயற்சியைப் பயனுள்ளதாக்கும் கர்த்தரையே மணவாழ்வுக்கும், குடும்பத்திற்கும் காவலராக ஏற்றுக் கொள்ளவேண்டும். எனவே, கணவனும், மனைவியும் தங்கள் மணவாழ்வின் வேற்றுமைகளைச் சரிசெய்ய மற்றவர்களின் உதவியை நாடத் தீவிரிக்காமல், மணவாழ்வின் காவலராகிய கர்த்தரின் உதவியை நாடவேண்டும். ஆதியாகமம்.32:22-29-ல் யாக்கோபு தேவசமுகத்தில் தன்னைச் சரிசெய்தபோது, ஏசாவின் மனதைதேவன் மாற்றியது போன்று ஒருவர் தேவனிடம் தன்னை சமர்ப்பித்து அவர் உணர்த்துவதன்படி தன்னைச் சரிசெய்த அந்நேரத்திலேயே, தேவன் அடுத்தவர் மனதைமாற்றி உடனே தன் நேசரை, தன் பிரியத்தை உடனடியாகக் கண்டுகொள்ள உதவி செய்வார்.

நான் என்னை தேவசமுகத்தில் சரிசெய்யும்பொழுது என் வாழ்க்கைத் துணையை தேவன் சரிப்படுத்துவார் என்ற விசுவாசமும், அந்த விசுவாசத்தை செயல்படுத்துவதும் நம்மண வாழ்வில் மட்டுமல்லாது வாழ்வின் எல்லாப் பகுதிகளிலும் பின்பற்றவேண்டிய அனுபவமாகும். தேவனிடம் தன்னைச் சரிப்படுத்தி, தேவஉதவியால் வாழ்க்கைத் துணையும் சரிப்படுத்தப்படும் பொழுது, தலைவி தன் நேசரை உறுதியாகப் பிடித்துக் கொண்டது போன்று, கணவனும், மனைவியும் தங்கள் மனவேற்றுமையை மேற்கொண்டவுடன் தங்கள் உறவுஉறுதிப்பட ஒருவரோடொருவர் தங்கள் அன்பையும், இன்பத்தையும் பகிர்ந்து கொள்ளவேண்டும். மணவாழ்வில் ஊடலும், அதைச் சரிசெய்தபின் இன்பக்கூடலும் மணவாழ்வைச் சுவையானதாகவும், நெருங்கிப் பிணைந்த தாகவும் மாற்றும்.

இறுதியாக, கணவன் மனைவியிடையே எழுந்த மனவேற்றுமைக்குக் கணவனின் பிறந்தவீட்டு உறவினரோ, மனைவியின் பிறந்தவீட்டு உறவினரோ, அல்லது சில நேரங்களில் இருபகுதியினருமோ காரணமாக இருக்கலாம். அச்சூழ்நிலையில் முதலாவதாகக் கணவனும் மனைவியும், மணநாளில் தேவசமுகத்தில் ஒருவருக்கொருவர் வாக்குக் கொடுத்தபடி தங்கள் உறவைச் சீரமைத்தபின், இப்பிரச்சனை மீண்டும் தலைதூக்காமல் இருக்கச்செய்ய, இந்த மனவேற்றுமைக்குக் காரணமாக அமைந்த உறவினர்களோடும் தெளிவாகப் பேசி, கணவன் மனைவி உறவைப் பாதிக்கும் எச்செயலையும் செய்யாதிருக்க முயற்சி எடுக்கப்படவேண்டும். வேதம் கூறுவதுபோன்று ஓர் ஆணும் ஒரு பெண்ணும் தேவசமுகத்தில் ஒருவருக்கொருவர் வாக்குக்கொடுத்து கணவனும் மனைவியும் ஆனபின், அந்த உறவே, அதுவரை இருந்த பிறந்த வீட்டின் உறவைக்காட்டிலும் மேலானது என்ற உணர்வோடு, கணவன் மனைவி உறவில் வேறு எந்த உறவினரும் விரிசல் ஏற்படுத்துவதை தேவஉதவியோடு தடைசெய்யவேண்டும்.

லூக்கா 22:32-ல் இயேசு பேதுருவிடம், "நீ குணப்பட்டபின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து" என்று பொறுப்புக் கொடுத்தது போன்று, தங்கள் மனவேற்றுமையை மேற்கொண்டு வெற்றிபெற்ற தம்பதியினர் மற்றவர்களுக்கு மாதிரியாகவும், வழிகாட்டியாகவும் மாறவேண்டும். எனவேதான் இப்பாடல் எருசலேமின் இளம்பெண்களுக்குக் கூறப்படும் அறிவுரையோடு முடிவடைகிறது.

திருமண வாழ்வுக்கு ஆயத்தமாகும் இளைஞரும், இளம் பெண்களும் மணவாழ்வை வெறும் கனவுலக வாழ்வாகக் கருதிக் காலம் வருமுன்னே காதல் உணர்வைத் தூண்டி, விளக்கு நெருப்பில் வாழ்வை இழக்கும் பூச்சிகளாக மாறிவிடாதிருக்க எச்சரிப்பின் ஆணை கொடுக்கப்படுகிறது. மணவாழ்வில் நேரிடக்கூடிய மனவேற்றுமைகளை மேற்கொள்ளும முதிர்ச்சியைப் பெற்றுக் கொள்ளாமல் வாலிப உணர்வுகளின் வடிகாலாக மட்டுமே மணவாழ்வைத் தேடாமலிருந்து, தேவையான முதிர்ச்சியையும், மனப்பக்குவத்தையும் அடையும்படி மணமான தம்பதியினர், மணவாழ்வுக்கு ஆயத்தம் அடைபவர் களுக்கு நல்வழிகாட்ட வேண்டும்.

நம் ஒவ்வொருவரின் மணவாழ்வும் என்றும் பூத்துக்குலுங்கும் திராட்சத் தோட்டமாக விளங்கவும், மற்றவர்களுக்கு முன்மாதிரியாக அமையவும், தேவஉதவியோடு முயற்சி செய்வோமாக!

# ஜெபத்தில் காணப்பட வேண்டிய ‘4’ எல்லாம்



“எந்தச் சமயத்திலும், சகலவிதமான வேண்டுதலோடும், விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம் பண்ணி, அதன் பொருட்டு மிகுந்த மன உறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக் கொண்டிருங்கள்” (எபே.6:18).

இந்த வசனத்தில் அதிகம் பயன்படுத்தப்படும் வார்த்தை ‘சகல’ ‘எல்லா’ (All) என்பதாகும். இந்த ஒரு வசனத்தில் மட்டும் 4 வகையான ‘எல்லா’ (All) என்ற பொருள்படும் வார்த்தைகள் உள்ளது.

### 1. எல்லா நேரத்திலும் (ALWAYS)

உண்மையான விசுவாசி தொடர்ந்து எல்லா நேரத்திலும் ஜெப சிந்தனையோடு வாழ்கிறார். இதைத் தான் தெசலோனிக்கேயருக்கு எழுதும் நிருபத்தில் “இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்” (1தெச.5:17) என்று பவுல் எழுதுகிறார். ஆம் நாம் தேவனோடு உரையாடுதல் இடைவிடாமல் எப்போதும் இருக்கும் பழக்கமாய் இருக்க வேண்டும் (அப்.10:2;12:12). எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள் என்று இயேசு கூறுகிறார் (லூக்கா 21:36).

### 2. எல்லாவித ஜெபத்திலும் (ALL PRAYER)

நம் வாழ்வே ஜெப வாழ்வாய் இருப்பதால், நம் ஜெபங்களும் பல வகைப்பட்டதாக இருக்கிறது. ஒரு கிறிஸ்தவனின் ஜெபம் கிரமமாகவும், திட்டமிடப்பட்டதாகவும், குறிப்பானதாகவும் இருக்க வேண்டும். அவசர தேவைகளுக்கும் ஜெபிக்க ஆயத்தமாக இருக்க வேண்டும். நம்முடைய ஜெபங்கள் சில துதிகள் நிறைந்ததும், ஆராதனையாகவும் மற்றும் பாவ அறிக்கை உள்ளதாகவும் இருக்கலாம். நாம் ஆவியோடு ஜெபிப்பதையும், உபவாசித்து ஜெபிப்பதையும், மன்றாடி ஜெபிப்பதையும், நன்றி செலுத்தி ஜெபிப்பதையும், பாவ அறிக்கை செய்து ஜெபிப்பதையும், போராடி ஜெபிப்பதையும், பயிற்சி செய்ய வேண்டும். இவற்றைத்தான் “எல்லாவித ஜெபத்தோடும்” என்று அப்.பவுல் குறிப்பிடுகிறார்.

### 3. எல்லாவித மன உறுதியோடும் (ALL PERSEVERANCE)

இது நாம் சோர்ந்துபோகாமல் ஜெபிக்க வேண்டும் என்பதைக் குறிக்கிறது. ஜெபித்தல் என்பது இயல்பாக காணப்படுவதோ அல்லது எளிதான காரியமோ அல்ல. ஜெபிப்பதற்கு கடின உழைப்பும், விடாமுயற்சியும் தேவை. எல்லாவித மன உறுதியும் தேவை. நீங்கள் யாருக்காக ஜெபிக்கிறீர்கள்? எதற்காக ஜெபிக்கிறீர்கள்? சோர்ந்துபோகாமல் ஜெபியுங்கள். நாம் இடைவிடாமல், விடா முயற்சியுடன் ஜெபிக்க வேண்டும் என்று இயேசு கற்பித்துள்ளார் (மத்தேயு 7:7; லூக்கா 18:1-8).

### 4. எல்லா பரிசுத்தவான்களுக்காகவும் (ALL THE SAINTS)

எல்லோருக்கும் நம் ஜெபம் தேவை. குறிப்பாக மற்ற விசுவாசிகளுக்காகவும், பரிசுத்தவான்களுக்காகவும் ஜெபித்தல் வேண்டும். தேவனுக்கு மிகப் பெரிதானதோ, அல்லது அற்பமானதோ எதுவும் கிடையாது. நாம் சில நேரங்களில் மட்டும், சிலருக்காக மட்டும், சில வகை ஜெபங்கள் மட்டும் செய்கிறோம். ஆனால் தேவன் எல்லாவற்றிற்காகவும், எல்லோருக்காகவும், எல்லா நேரங்களிலும் நாம் ஜெபிக்கவேண்டுமென்று விரும்புகிறார்.



# பரிசுத்தமாகுங்கள் ஆயத்தப்படுங்கள்

**திருமதி. கெட்சியாள் மோகன்**
President, Women's Fellowship Department

பரிபூரண ஜீவன் வாசகர்கள் அனைவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் புது வருட வாழ்த்துக்கள்.

இப்புதிய ஆண்டிற்குள் பிரவேசித்திருக்கும் நாம் அனைவரும் இம்மட்டும் நம்மை நடத்தி வந்த கர்த்தரை முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும் துதிக்க வேண்டும். நாம் கடந்து வந்த நெருக்கமான சூழ்நிலைகள், என்ன தான் நடக்குமென்று பயந்த சூழ்நிலைகள், இவைகளின் மத்தியில் நம்மை நடத்தி வந்த கர்த்தரை நன்றி நிறைந்த இதயத்தோடு துதிக்க வேண்டும். தண்ணீரைக் கடக்கவும், சோதனையை ஜெயிக்கவும், மதிலைத் தாண்டவும் உதவிசெய்து ஆபத்து நாளில் அனுகூலமான துணையாக இருந்தாரே. கரம் நீட்டி ஆசீர்வதித்து எல்லையை பெருக்கினாரே, இத்தனை நன்மைகள் செய்த நல்லவரை நாம் மனமார துதிக்க வேண்டாமா? சொஸ்தமான பத்து குஷ்டரோகிகளில், ஒரேயொரு சமாரியன் மட்டும் திரும்பி வந்து நன்றி சொன்னபோது, மற்ற ஒன்பது பேர் எங்கே? என்று ஆண்டவர் கேட்கிறார். தாம் செய்த நன்மைகளுக்காக நாம் நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டுமென்று ஆண்டவருடைய இருதயம் எதிர்பார்க்கிறது. தாங்கள் வெற்றி பெற்றபோது யோசபாத்தும், யூதா மனுஷர் யாவரும் பெராக்காவிலே கூடி கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்தினார்கள் என்று 2 நாளாகமம் 20:26-ல் வாசிக்கிறோம். உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை அவர் மூலமாய் எப்போதும் தேவனுக்கு செலுத்தக்கடவோம் என்று எபிரெயர் 13:15-ல் வாசிக்கிறோம். நம்முடைய ஸ்தோத்திர பலிகளில் தேவன் பிரியமாயிருக்கிறார். அதை எப்போதும் செலுத்த வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார்.

1 கொரி.5:6-8-ல் மேன்மை பாராட்டுகிறது நல்லதல்லவென்றும், பழைய புளித்தமாவாகிய துர்க்குணம், பொல்லாப்பு என்கிறவைகளை களைந்து போட்டுவிட்டு புதிய மனிதனைத் தரித்துக் கொள்ள வேண்டும் என்றும் வாசிக்கிறோம். நம்மை அடிமைப்படுத்தியிருக்கும் சகல காரியங்களிலிருந்தும் நாம் விடுதலையாக வேண்டும். கோபம், மூர்க்கம் போன்ற மாம்சத்தின் கிரியைகள், தேவையில்லாத பொழுதுபோக்குகள், நேரத்தை விரயமாக்கும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், விளையாட்டுக்கள் எல்லாவற்றிலிருந்தும் நாம் விடுதலை பெற்று புதிய மனிதனைத் தரித்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால், பழைய துருத்தியில் புதிய ரசத்தை வார்த்து வைக்கிறது இல்லை. புது துருத்தியில் தான் புது ரசத்தை வார்த்து வைப்பார்கள். அப்போது தான் இரண்டும் பத்திரப்பட்டிருக்கும் (மத்.9:17). பழைய துருத்தியாகிய இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனிதனைக் களைந்துப் போட்டுவிட்டு உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி புது துருத்தியாகிய புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளும்போது (எபேசியர் 4:22-24) கிருபை, தயவு, ஆசீர்வாதம், வாக்குத்தத்தம் ஆகியவைகளைப் பெற்றுக் கொள்வோம்.

1. 1 கொரி.10:5-ல், ஞானஸ்நானம் பெற்றும், ஒரே ஞான போஜனத்தைப் புசித்தும், ஒரே ஞான பானத்தைக் குடித்ததுமான அநேகரிடத்தில் தேவன் பிரியமாயிருந்ததில்லை என்று வாசிக்கிறோம். அப்படியானால், ஆவியானவர் விரும்புகிற காரியத்தை அறிந்து அதை நாம் செய்ய வேண்டும்.

அப்போஸ்தலனாகிய பவுலைப்போல பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி ஓட வேண்டும். பின்னானவைகள் எனும் போது, நம்முடைய தோல்விகள், கஷ்டங்கள், நஷ்டங்கள் மட்டுமல்லாமல், நம்முடைய வெற்றிகளிலேயே திருப்தியடைந்து உட்கார்ந்து விடாமல் கர்த்தர் நமக்கு வைத்திருக்கும் இலக்கை நோக்கி ஆசையாய் ஓட வேண்டும். கடந்த கால வெற்றிகளிலேயே, திருப்தியடைந்து உட்கார்ந்து விடும்போது, முன்னானவை களை நாடி ஓட முடிவதில்லை. ஆவிக்குரிய மெத்தனம் வந்து விடுகிறது. நம்முடைய இலக்கு என்ன? எதற்காக அழைக்கப்பட்டிருக்கிறோம்? என்பதை அறிந்து அதை ஆசையாகப் பின்தொடர்ந்து ஓட வேண்டும்.

a. குமாரனுடைய சாயலுக்கொப்பாக மாற வேண்டும். ரோமர் 8:21 நம்முடைய ஜென்ம சுபாவம், பேய்க்குணம், மாம்சத்தின் கிரியைகள் எல்லாவற்றிலிருந்தும் விடுதலையாகி கிறிஸ்துவின் சாயலைத் தரித்துக் கொள்ள வேண்டும். 1யோவான் 3:2-ல் இயேசு கிறிஸ்து வரும்போது அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போ மென்று அறிந்திருக்கிறோம். கிறிஸ்துவின் சாயலைத் தரித்துக் கொள்வதும், அவரைப் போல பரிசுத்தமாவதும் நம்முடைய இலக்காக இருக்கின்றது. அதற்காக நாம் பிரயாசப்பட வேண்டும்.

b. 1தெச.5:23 நம்முடைய ஆவி, ஆத்மா, சரீரம் முழுவதும் குற்றமற்ற தாயிருக்கும்படி காக்கப்படவேண்டும். நம்முடைய சரீரத்தை மட்டுமல்லாமல் ஆவியையும் ஆத்துமாவையும் கூட குற்றமற்றதாயிருக்கும்படி காத்துக்கொள்ள வேண்டும். அப்போது தான் நாம் அவரைக் காணமுடியும்.

c. யோவான் 17:4 நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்து முடித்தேன் என்று ஆண்டவராகிய இயேசு கூறுகிறார். நாம் செய்யும்படி தேவன் நமக்கு நியமித்த கிரியைகளை நாம் செய்து முடிக்க வேண்டும். நமக்கு தோன்றினவைகளை எல்லாம் செய்துகொண்டிருக்கக் கூடாது. நமக்குப் பிரியமானவைகளை அல்ல, நமக்குக் குறித்தவற்றை செய்து முடிக்க வேண்டும். யோவா 4:34-ல், இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி, நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது என்று கூறுகிறார். எஜமானன் ஒருவன் தன் வேலையாளிடம், தான் மதிய உணவிற்கு ஒரு மணிக்கு வருவதாகவும், அதற்குள் உணவை ஆயத்தம் பண்ணி வைக்கும்படியும் கூறி வெளியே சென்றுவிட்டார். அவர் குறித்த நேரத்திற்கு வீட்டிற்கு வந்தபோது, மேசை காலியாக இருந்தது. அதிருப்தி அடைந்தவராய் ஜன்னலின் வழியாகப் பார்த்தப் போது, வேலையாள் தோட்டத்தை சுத்தம் பண்ணிக் கொண்டிருந்தான். அவனைக் கூப்பிட்டுக் கேட்டபோது, நான் ஜன்னலின் வழியாக தோட்டத்தைப் பார்த்தேன். மிகவும் அசுத்தமாக இருந்தது. எனவே சுத்தம் செய்ய ஆரம்பித்தேன். நேரமாகிவிட்டது என்றானாம். அதற்கு எஜமானன், நான் உனக்கு கொடுத்த வேலை என்ன, நீ செய்து கொண்டிருப்பது என்ன என்று கடிந்து கொண்டாராம். அதே போல, பரலோகத்தின் ஆண்டவர், நாம் ஒவ்வொருவரும், ஒவ்வொரு நாளும் செய்து முடிக்க வேண்டிய வேலைகளை நியமித்து வைத்திருக்கிறார். எந்தெந்த ஆத்துமாவை சந்திக்க வேண்டும், யார் யாரை உற்சாகப்படுத்த வேண்டும், எந்த அளவு ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர பிரயாசப்பட வேண்டும், நமக்கு கொடுக்கப்பட்டிருக்கும் பொறுப்புகளில் எந்த அளவிற்கு உண்மையாய் இருக்க வேண்டும் என்று தேவன் குறித்திருக்கிறாரோ, அவைகளை எல்லாம் செய்து முடிக்க வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார்.

2. எசேக்கியல் 38:7, நீ ஆயத்தப்படு, உன்னுடனே கூடின உன் எல்லாக் கூட்டத்தையும் ஆயத்தப்படுத்து. உலகத்தின் முடிவும், ஆண்டவரின் வருகையும் அதி விரைவில் இருப்பதால், நீயும் ஆயத்தப்படு, உன்னோடிருக்கிறவர்களையும் ஆயத்தப்படுத்து என்று ஆண்டவர் கூறுகிறார். மற்றும் வேறு எதற்கெல்லாம் ஆயத்தப்பட வேண்டும் என்று பார்ப்போம்.

a. யாத்.34:2, விடியற்காலத்தில் நீ ஆயத்தமாகி, காலமே என் சமுகத்தில் வந்து நில். ஒவ்வொரு நாளும், அவருடைய சந்நிதானத்தில் போய் நிற்க ஆயத்தப்பட வேண்டும். அவர் சமுகத்தில் நிற்கும்போது கர்த்தர் மேகத்தில் வந்து நிற்கிறார். தேவ சமுகம் மேகத்தில் கடந்து வரும். 8 ஆம் வசனத்தில், மோசே தரை மட்டும் குனிந்து பணிந்துகொண்டு என்று பார்க்கிறோம். தேவ சமுகத்தில், ஆண்டவரைப் பணிந்து கொண்டு ஆராதிக்க வேண்டும். கர்த்தர் அவனுக்கு முன்பாக கடந்து போகிற போது, அவர், கர்த்தர் ... சத்தியமுமுள்ள தேவன் என்று கூறி பணிந்து கொள்கிறார். நாம் ஆராதிக்கிற தேவ யாரென்று அறிந்து நாம் அவரை ஆராதிக்க வேண்டும். பின்பு எங்களை உமக்குச் சுதந்திரமாக ஏற்றுகொள்ளும் என்று ஜெபம்பண்ணுகிறான். அப்போது தேவனாகிய கர்த்தர் மோசேயோடு பேசுகிறார். நாமும், ஒவ்வொரு நாளும், கர்த்தரை ஆராதித்து, ஜெபம் பண்ணி, கர்த்தருடைய சத்தத்தை கேட்க ஆயத்தமாகி அவரை சந்திக்க வேண்டுமென்று அவர் விரும்புகிறார்.

b. சகரியா 10:1 பின்மாரிக்காலத்து மழையைக் கர்த்தரிடத்தில் வேண்டிக் கொள்ளுங்கள். எழுப்புதலுக்காக ஆயத்தமாக வேண்டும். எழுப்புதலுக்காக தனிப்பட்ட விதத்தில், குடும்பமாக, சபையாக சேர்ந்து ஜெபிக்க வேண்டும். நம் தனிப்பட்ட தேவைகளுக்காக ஜெபிப்பதைக் காட்டிலும், எழுப்புதலுக்காக ஜெபித்து, அதில் பங்கு கொள்ளவும் ஆயத்தப்பட வேண்டும்.

c. மத்தேயு 24:42,44. நீங்கள் நினையாத நேரத்தில் மனுஷ குமாரன் வருவார். ஆதலால், நீங்கள் விழித்திருந்து, ஆயத்தமாயிருங்கள் .

நாம் நினையாத வேளையில் மனுஷ குமாரன் வரப்போவதால்,மாமிசத்தின் கிரியைகளை களைந்துப் போட்டு, கிறிஸ்துவின் சாயலை அணிந்து கொண்டு, கிறிஸ்து நமக்கு நியமித்த கிரியைகளை செய்து முடித்தவர்களாய் அவருடைய வருகைக்காக ஆயத்தப்பட்டு, அதற்கு முன்பாக உண்டாகபோகும் எழுப்புதலுக்காக ஜெபிக்க நம்மை ஒப்புக்கொடுப்போம். கர்த்தர் நம்மை அதற்கு தகுதிப்படுத்துவாராக, ஆமென்.

---

தாங்கள் பரிபூரண ஜீவன் பத்திரிக்கை மூலமாக ஆசீர்வதிக்கப்பட்டிருந்தால் உங்கள் சாட்சிகளை வாட்ஸ்அப் மூலமாகவோ, தபால் மூலமாகவோ தெரிவிக்கலாம். மேலும் ஆவிக்குரிய ஜீவியத்திற்கு பயனுள்ள செய்திகள், துணுக்குகள் ஆகியவற்றையும் அனுப்பலாம்.

**நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி**

**Rev. JERRY DANIEL**
303, C Block, Roshan Residency,
6, VOC Road, Cantonment, TRICHY-620 001
Cell : 94434 15484



# தலைமைத்துவம்

## (Leadership)

Dr. L. ஜெயபாலன்
முன்னாள் முதல்வர், தமிழ்நாடு வேதாகம கல்லூரி

தலைமைத்துவத்திற்கு முன்மாதிரியான இரட்சகர் இயேசு கிறிஸ்துவை குறித்த கருத்துக்கள் போன இதழில் இடம் பெற்றது. இயேசுவிடம் காணப்பட்ட பரிசுத்தம், பரம அன்பு, மனஉண்மை, மனத்தாழ்மை, மனஉருக்கம் மனோதைரியம், மன்னிக்கும் சிந்தை இவைகள் தலைமைத்துவத்திற்கு மிகவும் முக்கியமானவைகள்.

**● தலைமைத்துவத்தைக் குறித்த கருத்துக்கள் :**

- பிறர் செய்ய விரும்பாததை செய்யவைத்து, தான் செய்ததை விரும்ப வைப்பவனே தலைவன்.
- பிறர் செய்ய வேண்டியதை தானும்செய்து, பிறனை செய்ய வைப்பவனே தலைவன்.
- நேர்மை, தரிசனம். தைரியம், செய்ய முடியும் என்ற மனப்பான்மை உடையவனே தலைவன்.
- நற்பண்புகள், உண்மைத்துவம், தெய்வ நம்பிக்கை, வேத வசனத்தின், நடத்துதல், பரிசுத்தாவியானவரின் ஆளுகை உடையவனே தலைவன்.

**● தலைமைத்துவ பண்புகள் :**

தலைவராக இருக்க விரும்புபவர்கள், தலைவர்களாக இருக்கிறவர்களுக்கு கீழ்க்கண்ட காரியங்கள் பயனுள்ளதாகும்.

### 1. ஆர்வமாக இருத்தல் (Having an ambition)

சுயநல வாஞ்சையாக இராமல் தெய்வீக வாஞ்சையுடையராக இருக்க வேண்டும். தனது விருப்பங்களை கடவுளின் சமுகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். "உமக்குப் பிரியமானதை செய்ய எனக்குப் போதித்தருளும்... அதிகாலையிலே உமது கிருபையை கேட்கப்பண்ணும் ... நான் நடக்க வேண்டிய வழியை எனக்குக் காண்பியும்... சங்கீதம் 143:8-10. கடவுளை நம்பி, பரிசுத்தாவியானவரின் உதவியை நாடுகிறவன் ஒரு நல்ல தலைவன்".

தலைமைத்துவம் தாயின் வயிற்றில் இருக்கும்போதே உருவாகும். பாட்டுப்பாடி, தேவ சமுகத்தில் ஜெபிக்கும்பொழுது, வயிற்றிலுள்ள சிசுவும் அதை உணருமாம். வீட்டில், பள்ளியில், ஆலயத்தில், கல்லூரியில் தலைமைத்துவ தன்மைகள் உருவாக முடியும். இளமைப்பருவத்திலேயே விளையாட்டு வீரனாக மாற, இசைக்கலைஞனாக இருக்க வாஞ்சைகள் வரும். ஓவியம், இசை, விளையாட்டுகள், கல்வி, ஆவிக்குரிய வாழ்க்கை இவைகளில் ஆர்வமாயிருந்தவர்கள் பிற்காலத்தில் சிறந்த தலைவர்களாக மாறியுள்ளனர் என்பது வரலாறு. "யாரை அழைக்கிறாரோ அவர்களை உருவாக்குகிறார்" என்றார். ஒருவர் யாரை உருவாக்குகிறாரோ அவர்களை தேவன் உபயோகிக்கவும் செய்வார்.

**கனவுகள் (Dreams)**

Daily happenings அனுதினமும் நடப்பவை. நாம் கால்பந்து விளையாட்டைப் பார்த்தால், சொப்பனத்தில் நாம் விளையாடுவது போல் தோன்றும். மனதில் நினைப்பதும் கனவில் வரலாம்.

**பிசாசினால் உருவாகலாம் (Diabolical)**

அசுத்த எண்ணங்கள், கெட்டக்கனவுகள் போன்றவைகளை பிசாசு உருவாக்குவான்.

**தெய்வீகம் (Divine)**

கர்த்தர் வருங்காலத்தைக் குறித்து யோசேப்புக்கு வெளிப்படுத்தினார். ஆதி.37:5. “யோசேப்பு ஒரு சொப்பனம் கண்டு அதை தனது சகோதரருக்கு தெரிவித்தான்”

**கல்வி (Education)**

வேதத்தில் மோசே, யோசேப்பு, இயேசு கிறிஸ்து, பவுல் போன்றவர்களைக் குறித்து வாசிக்கும்பொழுது அப்படிப்பட்ட தலைவனாக இருக்க வாஞ்சைகள் வரும். மகாத்மா காந்தி, மார்ட்டின் லூதர் கிங் போன்றவர்களின் வாழ்க்கை சமத்துவம், நீதி போன்றவைகளுக்காக பாடுபட எண்ணம் வரும்.

**3. உண்மையுள்ளவர்களாக இருத்தல் (Be faithful in small things)**

“தனது வேலையில் ஜாக்கிரதையாயிருக்கிறவனைக் நீ கண்டால் அவன் நீசருக்கு முன்பாக நில்லாமல், இராஜாக்களுக்கு முன்பாக நிற்பான்” (நீதி.22:29).

ஒரு சின்ன வேலையாக இருந்தாலும், அதை ஒழுங்காகச் செய்ய வேண்டும். இக்கால தத்துவம் என்னவெனில், பிந்தி ஒருவன் முன்கூட்டியே செல்லுவான். ஆள் இருந்தால் வேலை செய்வான். இல்லாவிட்டால் சோம்பேறியாக நேரத்தை வீணடிப்பான். இந்நிலை இருக்கவே கூடாது. ஆரம்பத்தில், ஆலயத்தை சுத்தம் செய்தல், சபை வாகனத்தை ஓட்டுதல், ஞாயிறு பள்ளி, வீட்டுக்கூட்டம் நடத்துதல் போன்றவையாக இருக்கலாம். “எதைச் செய்தாலும் அதை மனிதருக்கு என்று செய்யாமல் கர்த்தருக்கென்று செய்ய வேண்டும்” (கொலோ.3:22,23).

உண்மையாக, நேர்மையாக இருந்த யோசேப்பை கர்த்தர் எகிப்தின் முக்கிய தலைவனாக மாற்றினார். ஆடுகளை மேய்த்த தாவீது, தனது மந்தையை ஒழுங்காக கவனித்தான். கர்த்தர்மேல் நம்பிக்கையாயிருந்த அவனை தேவன் ராஜாவாக மாற்றினார். நாம் பதவியை தேடிச்செல்லக் கூடாது. பதவி தானாகவே தேடிவரும். கழுதையை தேடிச் சென்றதால் (பொறுப்பு) தலைமைத்துவம், சவுலை தேடி வந்தது. பதவியை தேடிச் சென்றதால் கழுதை அப்சலோமை விட்டு ஓடியது. இதை நாம் ஒருக்காலும் மறந்து விடக்கூடாது.

---

## ஜெபியுங்கள் ! தாங்குங்கள் !!

பரிபூரண ஜீவன் பத்திரிக்கை ஊழியத்தின் மூலம் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பீர்கள், எனவே உங்கள் சாட்சிகளை எழுதி அனுப்புங்கள். பத்திரிக்கை ஊழியத்தின் தேவையை சந்திக்க ஒரு வெளியீட்டிற்கு ஆகும் செலவு ரூ.**1,25,000.** உதாரத்துவமாய் கொடுத்து உதவுங்கள் அல்லது உங்களால் இயன்ற அளவு கொடுத்து பத்திரிக்கை ஊழியத்தை தாங்குங்கள். இவை எல்லாவற்றிக்கும் மேலாக தொடர்ந்து இந்த ஊழியத்திற்காக ஜெபியுங்கள் நன்றி.

# A.G. தமிழ்நாடு வேதாகமக் கல்லூரி

(An ATA Accredited College)

மதுரை - 625 016

Email : agtbc1948madurai@gmail.com Website : www.agtbc.org

## I. Residential Studies (For Men only)

### 1. Master of Divinity (M.Div.)

**Medium** : English | **Duration** : 3 Years

**Eligibility :** Any Degree from Recognized University (10+2+3)

B.Th. Degree (ATA Accredited) with B+ or B Grade

### 2. Bachelor of Theology (B.Th.)

**Medium** : English and Tamil | **Duration** : 3 Years

**Eligibility** : +2 Pass (10+2)

### 3. Diploma in Theology (Dip.Th.)

**Medium** : Tamil | **Duration** : 2 Years

Eligibility: S.S.L.C. (X Pass)

## II. Modular Studies (For Men & Women)

### 1. Master of Divinity (M.Div.)

**Medium** : English | **Duration** : 3 Years

Eligibility: Any Degree from Recognized University (10+2+3)

B.Th. Degree (ATA Accredited) with B+ or B Grade

Men must be above 25 years. Women must have been married.

### 2. Bachelor of Theology (B.Th.)

**Medium** : Tamil | **Duration** : 3 Years

Eligibility: +2 Pass or Diploma in Theology (10+Dip.Th.) (ATA Accredited)

Men must be above 25 years. Women must have been married.

## III. Extension Studies

### 1. Diploma in Theology (Dip.Th.)

**Medium** : Tamil | **Duration** : 2 Years

Eligibility: S.S.L.C. (X Pass)

*Note : Men and Women with jewels are not admitted.*

கி.பி.2023-24-க்கான நிரப்பப்பட்ட விண்ணப்ப படிவம் வரவேற்கப்படுகின்றன.
1.06.2023 முதல் வகுப்புகள் ஆரம்பமாகும்.

**விண்ணப்ப படிவத்திற்கு**

**Download Application Form : www.agtbc.org**

தொடர்பு: *Director of Admissions*

## AG Tamilnadu Bible College

**Bye Pass Road, Kalavasal, Madurai - 625 016.**

**Cell : 96982 55027, 88389 27937, Ph: 0452 2601940.**



# எஸ்றாவின் புஸ்தகம்

## புத்தக அறிமுகம்


**Rev. Dr. சாமுவேல் ராஜ் R.**

All India National Director, Global University


எஸ்றாவின் புத்தகம் சிறையிருப்பிலிருந்து திரும்பிவந்த யூதர்களின் சரித்திரத்தை நமக்குத் தருகிறது. திரும்பி வந்த யூதர்களின் சரித்திரம், பெர்சிய ராஜாக்களின் கட்டளைகள், அதிகாரப்பூர்வ ஆவணங்களாக அனுப்பப்பட்ட கடிதங்கள், யார் யார் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தார்கள் என்ற யூதரின் பதிவேடுகள், எஸ்றா என்னும் இப்புத்தக ஆசிரியரின் தனிப்பட்ட வாழ்க்கைக் குறிப்புகள், தேவன் சார்பில் நின்று ஆலயத்தைக் கட்டவும் நியாயப்பிரமாணத்தை திரும்பவும் மக்கள் கைக்கொள்ளவும் செய்த தலைவர்களின் செயல்கள் என பல்வேறு விபரங்களை இப்புத்தகம் உள்ளடக்கியுள்ளது.

எஸ்றாதான் இப்புத்தகத்தை எழுதியவர் அர்தசஷ்டா என்ற பெர்சிய ராஜாவின் காலத்தில் சிறைப்பட்டிருந்தவர்கள் நடுவில் வாழ்ந்துவந்த ஒரு ஆசாரியன் இவன். இந்த எஸ்றா, கர்த்தர் அருளிய மோசேயின் நியாயப்பிரமாணத்திலே தேறின வேதபாரகனா யிருந்தான். கர்த்தருடைய வேதத்தை ஆராயவும், அதன்படி செய்யவும் இஸ்ரவேலிலே கட்டளைகளையும் நீதிநியாயங்களையும் உபதேசிக்கவும் தன் இருதயத்தை பக்குவப்படுத்தியிருந்தான் (எஸ்றா 7:6,10).

**பழைய ஏற்பாட்டில் எஸ்றா புத்தகம்:**

- ஆதியாகமம் முதல் உபாகமம் வரையுள்ள ஐந்து புத்தகங்களும் தேவன் இஸ்ரவேலரை விசேஷித்த ஜனங்களாகத் தெரிந்துக்கொண்டதையும், தமது நியாயப்பிரமாணங்களை அவர்கள் கைக்கொண்டு நடக்கும்போது போதித்த விபரங்களையும் நமக்குத் தருகின்றன.
- யோசுவா முதல் 2 நாளாகமம் வரையுள்ள ஒன்பது புத்தகங்களில்,

  தேவன் இஸ்ரவேலருக்கு ஒரு தேசத்தைத் தந்து, அதை ஆளும்படி அரசர்களையும் தந்தார்; ஆனால் இஸ்ரவேலர் தொடர்ந்தேர்ச்சியாகக் கர்த்தருக்கு கீழ்படியாமல் பாவம் செய்தபடியால் அவை இரண்டையும் இழந்தனர்.
- எஸ்றா முதல் எஸ்தர் வரையுள்ள மூன்று புத்தகங்களில், சிறைக்கைதிகளாய் நாடுகடத்தப்பட்ட இஸ்ரவேலர் சென்றிருந்த எல்லா தேசங்களிலுமிருந்து அவர்களை விடுதலைசெய்து, அவர்களுடைய சிறையிருப்பை மாற்றி, மறுசீரமைப்புச் செய்த விபரங்களைக் காண்கிறோம்.

எபிரெய வேதாகமத்தில் 1,2 நாளாகமப் புத்தகங்கள் ஒரே புத்தகமாக அமைந்திருப்பது போலவே, எஸ்றா, நெகேமியா ஆகிய இரு புத்தகங்களும் ஒரே புத்தகத்தின் இரு பகுதிகளாக அமைந்துள்ளன. இந்த இரண்டு புத்தகங்களும் நாளாகமப் புத்தகங்களில் நாம் காணும் இஸ்ரவேலரின் தொடர்ந்தேர்ச்சியான சரித்திரமே ஆகும். எஸ்றா புத்தகம் தேவாலயம் கட்டப்பட்ட விபரங்களைத் தருகின்றது. (ஆனால் நெகேமியா புத்தகமோ எருசலேம் நகரமும் அதன் மதில்களும் கட்டப்பட்ட விபரங்களைத் தருகின்றன).

தேவன் இஸ்ரவேலருக்கு வாக்குத்தத்தம் செய்த தேசத்தில் அவர்களை எப்படி மறுபடியும் கொண்டுவந்து ஸ்திரப்படுத்தினார் என்ற விபரங்களையே எஸ்றா, நெகேமியா புத்தகங்கள் சரித்திரச் சம்பவங்களாகத் தருகின்றன. எருசலேம் தேவாலயத்தைத் திரும்பவும் எடுத்துக் கட்டும் சிறப்புச் சம்பவத்தை விவரிக்கிற எஸ்றா புத்தகம், அப்பணியில் மக்களுக்குத் தீர்க்கதரிசனம் சொல்லி ஊக்குவித்த ஆகாய், சகரியா ஆகிய தீர்க்கதரிசிகள் பற்றியும் குறிப்பிடுகிறது (எஸ்றா 5:1).

தேவன் இஸ்ரவேல் ஜனங்களுடன் செய்த உடன்படிக்கையின் சரித்திரம் மிகவும் முக்கியமானதாகும். இந்த உடன்படிக்கையை எஸ்றா திரும்பவும் மக்களுக்கு நினைவூட்டுகிறான். தேவன் மோசேயின் மூலம் இஸ்ரவேலருக்குக் கொடுத்த வாக்குத்தத்தங்களின் சுருக்கத்தை கீழ்காணும் இரண்டு குறிப்புகளில் குறிப்பிடலாம்:

- ஜனங்கள் தமக்குக் கீழ்படிந்தால் தேசத்தின் நன்மையையும் செழிப்பையும் அவர்களுக்குத் தருவார்.
- ஜனங்கள் தமக்குக் கீழ்படியாவிட்டால் அவர்களுக்கு சிறையிருப்பாகியத் தண்டனையைத் தருவார்.

இஸ்ரவேலரோ கர்த்தருக்குக் கீழ்படியவில்லை; எனவே, தேவன் தாம் சொல்லியிருந்தபடியே அவர்களை சிறையிருப்பில் அனுப்பினார் (எஸ்றா 9:7). (அசீரியாவுக்கும், பாபிலோனுக்கும் சிறைப்பட்டுச் சென்றனர்). அவர்கள் மனந்திரும்பி மறுபடியும் கீழ்படிந்து கர்த்தரைத் தேடினால், தாம் அவர்களுக்கு இரங்கித் தாம் அவர்களைச் சிதறடித்த எல்லா எல்லைகளிலுமிருந்து அவர்களைத் திரும்பச் சேர்த்துக்கொள்ளுவார் என்று உபாகமம் 30:3-ல் வாசிக்கிறோம். இந்த வாக்குத்தத்தத்தை கர்த்தர் எப்படி நிறைவேற்றினார் என்பதை எஸ்றா புத்தகம் காட்டுகிறது.

**சிறையிருப்பும், திரும்பி வருதலும்:**

**சிறையிருப்பு:**

“இந்த தேசமெல்லாம் வனாந்தரமும் பாழுமாகும்; இந்த ஜாதிகளோ, எழுபது வருஷமாகப் பாபிலோன் ராஜாவைச் சேவிப்பார்கள்” (எரேமியா 25:11) என்று தீர்க்கதரிசியாகிய எரேமியா உரைத்த தீர்க்கதரிசனத்தின்படியே பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் எருசலேமுக்கு வந்து தெற்கு ராஜ்யத்தைச் சிறைப்பிடித்துச் சென்றான். இந்த சிறையிருப்பு மூன்று நிலைகளில் அல்லது மூன்று காலக்கட்டங்களில் நடந்தேறிற்று.

- கி.மு 606-ல் யோயாக்கீம் ராஜாவும், தானியேல், சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ முதலானோர் சிறைப்பிடித்துச் செல்லப்பட்டனர் (2 நாளா. 36:5-7).
- கி.மு 597-ல் யோயாக்கீமின் குமாரனாகிய யோயாக்கீன் ராஜாவும், அவனுடன் எசேக்கியேல் முதலான 11,000 பேரும் சிறையாகக் கொண்டு செல்லப்பட்டனர் (2நாளா. 36:9-10).
- கி.மு 586-ல் சிதேக்கியா யூதாவை ஆண்டுவந்தபோது நேபுகாத்நேச்சார் திரும்பவும் வந்து, தேவனுடைய ஆலயத்தைத் தீக்கொளுத்தி, எருசலேமின் அலங்கத்தை இடித்து, அதின் மாளிகைகளையெல்லாம் அக்கினியால் சுட்டெரித்து, அதிலிருந்து திவ்வியமான பணிமூட்டுகளையெல்லாம் அழித்தான். பட்டயத்துக்குத் தப்பின மீதியானவர்களை அவன் பாபிலோனுக்குச் சிறைப்பிடித்துக் கொண்டுபோனான்.

எரேமியா தீர்க்கதரிசியும், தேசத்தின் ஏழையானவர்கள் மட்டுமே எஞ்சிவிடப் பட்டிருந்தனர் (2நாளா.36:11-20). (பின்பு எரேமியாவுடனிருந்தவர்கள் அவனைக் கூட்டிக்கொண்டு எகிப்தில் தஞ்சமடைந்தனர்). பெர்சிய ராஜ்யம் ஸ்தாபிக்கப்படு மட்டும் (கி.மு538) சிறையிருப்பில் சென்ற யூதர்கள் 70 ஆண்டுகள் பாபிலோனில் அடிமைகளாக இருந்தனர் (2நாளா. 36:20).

தேசம் பாழாய்க் கிடந்தது; எழுபது வருடம் முடியுமட்டும் ஓய்ந்திருந்தது, (2நாளா.36:21) என்று எரேமியா உரைத்தத் தீர்க்கதரிசனங்களின்படியே இவையெல்லாம் நிறைவேறிற்று.

**திரும்பி வருதல்:**

யூதா ஜனங்கள் மூன்று நிலைகளில் சிறையிருப்பில் சென்றதுபோலவே, மூன்று நிலைகளில் அல்லது மூன்று காலக்கட்டங்களில் தங்களது சொந்த தேசத்துக்குத் திரும்பி வந்தனர்.

- கி.மு538: இது பெர்சிய ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டக் காலம், (2நாளா.36:20). பெர்சியாவின் முதலாவது ராஜாவாகிய கோரேஸ் அரசரின் கட்டளைப்படி எருசலேமிலுள்ள கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுகிறதற்குப் போகும்படி யூதா பென்யமீன் வம்சங்களின் தலைவரும் ஆசாரியரும் லேவியருமன்றி எவர்கள் ஆவியை தேவன் எழுப்பினாரோ அவர்கள் எல்லாரும் எழும்பினார்கள், (எஸ்றா 1:5). அவர்களில் குறிப்பாக தாவீது ராஜாவின் வம்சாவழியிலும், ஆசாரியனாகிய ஆரோனுடைய வம்சாவழியிலுமிருந்து வந்த செருபாபேல், யெசுவா ஆகியோர் முக்கியமானவர்கள்.

  இவர்களது தலைமையின் கீழ் கி.மு538-ல் 50,000பேர் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தனர் (எஸ்றா 2-ம் அதிகாரம்)

- கி.மு457: முதலாவது திரும்பி வந்தவர்களின் காலத்திலிருந்து சுமார் 80 ஆண்டுகளுக்குப் பிறகு எஸ்றாவின் தலைமையின் கீழ் கிமு 457ல் 1700 ஆண்கள் உட்பட ஸ்திரீகளும் பிள்ளைகளுமாகச் சேர்த்து சுமார் 15000 யூதர்கள் எருசலேமுக்குத் திரும்பி வந்தனர், (எஸ்றா 8:1-14,18-22).
- கிமு 444: எஸ்றாவின் தலைமையில் திரும்பி வந்தவர்களின் காலத்திலிருந்து சுமார் 13 ஆண்டுகளுக்குப் பின் கி.மு444-ல் நெகேமியாவின் தலைமையின் கீழ் மூன்றாவது கூட்டம் திரும்பி வந்தார்கள் (நெகே. 2:1-10).

**எஸ்றா புத்தகத்தில் யூதர்களின் சரித்திரம்:**

திரும்பிவந்தோர் பற்றிய மேற்கண்ட குறிப்புகளில், முதல் இரண்டு காலக்கட்டங்களில் (கி.மு538,457) திரும்பி வந்தோருடைய விபரங்கள் எஸ்றாவின் புத்தகத்தில் தரப்பட்டுள்ளது. சுமார் 90 ஆண்டு கால இடைவெளியில் இந்த நிகழ்வுகள் நடந்தேறுகையில் பெர்சியாவின் அரசர்களாகிய கோரேஸ், தரியு, அர்த்தசஷ்டா ஆகிய மூவருடைய தலையீடுகளை யூதரின் மீட்பின் சரித்திரத்தில் காண்கிறோம். இக்காலத்தில் யூதர்களைத் சிறையிருப்பிலிருந்துத் திருப்பிக்கொண்டு வரவும், அவர்களை கர்த்தரின் வழியில் உறுதிப்படுத்தவும் மறுசீரமைக்கவும் செரூபாபேல் என்னும் தலைவனும், யெசுவா என்ற பிரதான ஆசாரியனும், ஆகாய் மற்றும் சகரியா தீர்க்கதரிசிகளும், எஸ்றா என்ற பிரதான ஆசாரியனும் பிரபலமானத் தலைவராயிருந்தனர்.

**திரும்ப வந்தோர்:**

தேவாலயத்தையும், நகரத்தையும் கட்டும்படி திரும்பி வந்தவர்கள் கட்டளைப் பெற்றிருந்தாலும், அதிலும் உபரியாய் கவனம் செலுத்தப்படவேண்டிய பணிகளும் இருந்தன.

திரும்பி வந்தோரில் அதிகமானோர் 70 வருட பாபிலோனியச் சிறையிருப்பில், பாபிலோனில் பிறந்தவர்களே. பாபிலோன் பெயர்களே அவர்களில் பலருக்கும் கொடுக்கப்பட்டிருந்தது. உதாரணமாக, செருபாபேல் பாபிலோனில் பிறந்தவன். அவன் பெயரின் அர்த்தம் பாபிலோனின் தளிர் அல்லது பாபேலின் தளிர் என்பதாகும். ஆனால் இவன் கர்த்தருக்காகத் துளிர்த்தான்.

**திரும்பி வந்தோரின் கடமைகள்:**

திரும்பி வந்த பலரும் கர்த்தருடைய நியாயப்பிரமாணங்களை மறந்துவிட்டிருந்தனர். சிலர் அவற்றை மக்கள் முன்பாக அலட்சியம் செய்தனர்.

எனவே இவர்கள் தேவனுடன் தாங்கள் செய்திருந்த உடன்படிக்கையை நினைவிற்கொள்ள வேண்டியக் கட்டாயத்திலிருந்தனர். இவர்கள் கடந்து சென்ற சிறையிருப்பு, 70 ஆண்டுகள் சிறைவாசம் ஆகியவை இராஜாக்கள் புத்தகங்களிலும், நாளாகமப் புத்தகங்களிலும் ஏற்கனவே தரப்பட்டிருக்கிறது. அவைகளை திரும்பி வந்த இவர்கள் நினைத்துப் பார்க்க வேண்டியதாயிருந்தது. தாங்கள் தங்கள் சொந்த தேசத்திற்கு திரும்பி வந்த நோக்கத்தையும் அறிய வேண்டியதாயிருந்தது.

இவைதவிர, தேவாலயம் மீண்டும் அஸ்திபாரமிடப்பட்டுக் கட்டப்பட வேண்டியிருந்தது. அதற்கு முன்பு ஜனங்கள் தங்கள் விசுவாசத்தில் மீண்டும் அஸ்திபாரமிடப்பட வேண்டியதாயிருந்தது.

**எஸ்றா புத்தகத்தின் பொருளடக்கம்:**

எஸ்றா புத்தகத்தில் மொத்தமுள்ள பத்து அதிகாரங்களையும் இருபிரிவுகளாகப் பகுத்துப் படிக்கலாம்.

**பிரிவு 1: முதல் ஆறு அதிகாரங்கள் (அதி. 1-7).**

செருபாபேல், யெசுவா ஆகியோரின் தலைமையின்கீழ் கிமு 538-ல் எருசலேமுக்குத் திரும்பிவந்த யூதரைப் பற்றியச் சரித்திரக்குறிப்புகளை இங்கு காண்கிறோம்.

2 நாளாகமப் புத்தகச் சரித்திரத்தின் தொடர்ச்சியாக எஸ்றா 1:1 ஆரம்பிக்கிறது.

1- ம் அதிகாரத்தில் கோரேஸ் அரசனின் கட்டளையையும், அதன்படி திரும்பிவர மக்கள் புறப்பட்டதையும் பார்க்கிறோம்.

2-ம் அதிகாரத்தில் முதலாவது திரும்பிவந்தோம் பற்றிய பெயர் பட்டியல் தரப்பட்டுள்ளது. சுமார் பத்துலட்சம் சிறைப்பட்டோரில் 50,000பேர் மட்டுமே திரும்பி வருகின்றனர்! (1:5; 2:64,65).

3-ம் அதிகாரத்தில் திரும்பி வந்தவர்கள் ஆலயத்துக்கு அஸ்திபாரம்போடும்படி செருபாபேலும், யெசுவாவும் ஊக்குவிக்கின்றனர்.

4-ம் அதிகாரத்தில் ஏற்கனவே யூதாவில் வாழ்ந்துவந்தோர் பொறாமையினால் நிறைந்து வேலையைத் தடுக்க முயன்றனர். அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி அதில் சிலகாலம் வெற்றியும் கண்டனர்.

5,6-ம் அதிகாரங்கள் சுமார் பதினாறு ஆண்டுகள் (கி.மு536-520) வேலைகள் தடைப்பட்டிருந்தாலும் ஆகாய், சகரியா தீர்க்கதரிசன உந்துதலினாலும், செருபாபேல், யெசுவா ஆகியோரின் தெய்வீகத் தலைமையினாலும், மீண்டும் ஆரம்பித்து கி.மு516-ல் ஆலயம் கட்டிமுடிக்கப்பட்டது, (எஸ்றா 6:15).

**பிரிவு 2: 7-10 அதிகாரங்கள்**

எஸ்றா புத்தகத்தின் 6ம் அதிகாரத்துக்கும் 7ம் அதிகாரத்துக்கும் இடையே சுமார் அறுபது ஆண்டுகால இடைவெளியுள்ளது. இக்காலத்தில்தான் எஸ்தர் புத்தகச் சம்பவங்கள் நடந்தேறுகின்றன.

கி.மு478-ல் எஸ்தர் ராஜாத்தியாய் மகுடம் சூட்டப்பட்டாள் என்பது சரித்திரக் குறிப்பாகும்.

7-8 அதிகாரங்கள் இப்பகுதியில் எஸ்றாவின் தலைமையின்கீழ் இன்னொரு சிறுகூட்டம் கி.மு457-ல் திரும்பிவந்த சரித்திரம் தரப்பட்டுள்ளது. ஏற்கனவே கி.மு538-ல் செருபாபேலின் தலைமையின்கீழ் திரும்பி வந்தவர்கள், தேவாலயத்தைக் கட்டி முடித்திருந்தனர்.

இப்பொழுது எஸ்றா திரும்பிவந்தபோது, கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தைக் கற்றுத்தரும் பணி அத்தியாவசியமானதாகக் காணப்பட்டது. எஸ்றா இப்பணியைச் செய்தான் என்று நெகேமியா 8:1-8-ல் வாசிக்கிறோம்.

9ம் அதிகாரம்: பாபிலோனிலிருந்து திரும்பிவந்த யூதர், தேசத்தில் ஏற்கனவே குடியிருந்த கானானியர், ஏத்தியர், பெரிசியர், எபூசியர், அம்மோனியர், மோவாபியர், எகிப்தியர், அம்மோரியர் ஆகிய புறஜாதியாரோடு திருமண உறவில் இணைந்து, அவர்களுடைய விக்கிரக வணக்கங்களிலும், பிற ஒழுக்கக்கேடுகளாலும் தங்களைத் தீட்டுப்படுத்திக்கொண்டனர்.

எஸ்றா அவர்களுக்காகப் பாவ அறிக்கைசெய்து ஜெபம்பண்ணி நியாயப்பிரமாண வாழ்க்கைக்கு அவர்களைத் திரும்பிவரச் செய்தான்.

10ம் அதிகாரம்: புறஜாதியாருடன் கலந்து கலப்பு மணம் செய்து பின்வாங்கிப்போன ஜனங்கள் பாவ அறிக்கைச் செய்யவும், புறஜாதியப் பெண்களை மணம் முடித்திருந்தவர்கள் அவர்களை விவாகரத்து செய்து அனுப்பிவிடவும் எஸ்றா வழிநடத்தின மெய்சிலிர்க்க வைக்கும் பரிசுத்த வைராக்கியச் செயலுடன் எஸ்றா புத்தகம் முடிகிறது.

**எஸ்றா புத்தகத்தின் கருப்பொருள் வசனம்:**

எஸ்றா 9:9ஐ இப்புத்தகத்தின் கருப்பொருள் வசனமாகக் கொள்ளலாம். “நாங்கள் அடிமைகளாயிருந்தோம்; ஆனாலும் எங்கள் அடிமைத்தனத்திலே எங்கள் தேவன் எங்களைக் கைவிடாமல் எங்களுக்கு உயிர்கொடுக்கவும். நாங்கள் எங்கள் தேவனுடைய ஆலயத்தை எடுப்பித்து, பாழாய்ப்போன அதைப் புதுப்பிக்கும்படிக்கும் எங்களுக்கு யூதாவிலும் எருசலேமிலும் ஒரு வேலியைக் கட்டளையிடும்படிக்கும், பெர்சியாவின் ராஜாக்கள் சமுகத்தில் எங்களுக்குத் தயைகிடைக்கச் செய்தார்”. இந்த வசனத்தில் “வேலியை” என்பதை “யூதாவில் எங்களுக்கு ஒரு சுவரைக்” கட்டளையிட்டார் என வாசித்துப் புரிந்துகொள்ளலாம்.

அவரே நமது வேலி; அவரே நமது கொம்பு (சங்.148:14).

நமது வாழ்வின் அனைத்து ஏற்றத் தாழ்வுகளிலும் கர்த்தர் நமது துணையாய் நிற்பார். இடிந்துபோனதை அஸ்திபாரமிட்டு எடுத்துக்கட்டுவோம்; விட்டுவிட்டப் பிரமாணங்களை மீண்டும் பின்பற்றுவோம். எஸ்றா புத்தக சரித்திரம் தரும் பாடங்கள் ஏராளம், ஏராளம்!



# கிறிஸ்துவின் சரீரமாகிய சபை


## Rev. J. தேவதாசன் கலையரசன்

Senior Pastor, Bethel AG Church, Kolathur


சபையைக் குறித்து இன்று பரவி வரும் பல்வேறு விஷம கருத்துக்கள் ஆரம்ப நிலை விசுவாசிகளை குழப்பி இருக்கின்றன. குறிப்பாக அதரிசன சபை (Invisible Church) தரிசன சபை (Visible Church) என்ற தலைப்பில் வெளிவரும் போதனைகள் ஜனங்களை பெரிதும் மடைமாற்றுகிறது, குழப்புகின்றது.

அதரிசன சபை, தரிசன சபை என்ற பதங்கள் வேதத்தில் காணப்படாத போதும், இதைக் குறித்து மனம் போல பேசுகிறவர்களால் ஸ்தல சபையின் முக்கியத்துவம் கேள்விக் குறியாக்கப்பட்டுள்ளது.

சபையைக் குறித்த சத்தியங்களை, வேதாகமம் பல எளிய உருவகங்கள் மூலம் பாமரரும் அறியும்படி விளக்குகிறது. பால் S. மினோர் (Paul S.Minear) என்பவர் 80-க்கும் அதிகமான உருவகங்கள் சபையைக் குறித்து இருப்பதாக Images of the Churches in the New Testament என்ற புத்தகத்தில் எழுதியிருக்கிறார். நமக்கு மிகவும் பரிச்சயமான சில உருவகங்களையும் அதிலும் குறிப்பாக “சரீரம்” என்று சொல்லப்பட்டுள்ள உருவகத்தையும் (Metaphor) தியானிப்பது மிகுந்த பிரயோஜனமாயிருக்கும். சமுதாயத்தைச் சந்திக்க தேவனின் திட்டம் (God's Strategy) ஸ்தல சபை என்கிறார் “ஜான்மெக்வாரன்”. ஸ்தல சபையின் முக்கியத்துவம் அறிந்த போதகர்தான் தனது சபை மூலம் அதிகமான புதிய சபைகளை உருவாக்குகிறார். ஸ்தல சபையின் முக்கியத்துவம் அறிந்த விசுவாசிகள் தான், சபையில் நாட்டப்படுவதுடன் தங்கள் சபைகளுக்கு பிரயோஜனமுள்ளவர்கள் ஆகிறார்கள்

### I. சபையைக் குறித்து விளக்கும் சில பிரபல்யமான உருவகங்கள்

**1.**சரீரம் (எபே.5:23; வெளி.19:7-9); **2.**மணவாட்டி (எபே.5:23; வெளி.19:7-9); **3.**கட்டிடம் / ஆலயம் (எபே.2:11-21; 1பேதுரு 2:5); **4.**மந்தை (யோவான் 10:26-27); **5.**கிளைகள் (யோவான் 15:1-5); **6.**தேவனுடைய குடும்பம் (மத்.12:49-50; எபே.2:19); **7.**தேவனுடைய வீடு (எபி.3:6).

### II. ஸ்தல சபை குறித்த புரிதலின் அவசியம்

வேதாகமத்தில் சபையைக் குறித்து மேன்மையாக எங்கெல்லாம் சொல்லப்படுகின்றதோ, அவ்வேத வசனங்களை அதரிசன சபைக்கும் (மத்.16:18), குறைவுகளைக் சுட்டிக்காட்டும்போது அது ஸ்தல சபையைக் குறித்தும் சொல்லப்பட்டது (1கொரி. 5:1) என்று வாதிடும் மக்கள் இருக்கிறார்கள். குறிப்பாக இவர்கள் “என் சபை” என்று இயேசு கிறிஸ்து கூறியது அதரிசன சபையைத் தான் என்கிறார்கள் (மத்.16:18). அது ஸ்தல சபையைக் குறிக்காது என வாதிடுகிறார்கள்.

இரட்சிக்கப்பட்டவர்களின் கூட்டமே சபை என்பது உண்மைதான். எனவே சபை என்பது கட்டிடத்தையல்ல, கட்டிடத்தில் கூடும் இரட்சிக்கப்பட்ட மக்களைத்தான் குறிக்கும் என்பதைத் தான் நாமும் நம்புகிறோம். அதேசமயம் நமது சபைகளில் இன்னும் இரட்சிக்கப்பட வேண்டிய அடுத்த தலைமுறை மக்களும் இருக்கிறார்கள். அவர்கள் கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்குள் புறக்கணிக்கப்பட வேண்டியவர்களா, என்ன?

எனவே அதரிசனமான சபையைத் தான் கர்த்தர் நேசிக்கிறார், போஷிக்கிறார், பாதுகாக்கிறார். ஸ்தல சபைகளையல்ல, என்று சிலர் கூறுவது சரியல்ல (மத்.16:18). 1000பேர் உள்ள ஒரு ஊரில் ஒரு ஸ்தல சபை உருவாகிறது என்று வைத்துக் கொள்வோம். அதினால் 100பேர் அந்த சபைக்கு வருகிறார்கள் இரட்சிக்கப்படுகிறார்கள். அந்த 100பேர் இரட்சிக்கப்பட்டதுதான் காரியம், இனி அவர்களின் ஆராதனை ஸ்தலமான **ஸ்தல சபையின்**

இருப்பு முக்கியமல்ல என்கின்ற வாதம் எவ்வளவு தவறானது பாருங்கள்?

ஒரு வேளை அந்த ஊரில் அப்படி ஒரு ஸ்தல சபை என்ற ஒன்று வராதிருந்தால், "இரட்சிக்கப்பட்டவர்களின் கூட்டம்" எங்கிருந்து வரும்? இந்த எளிய புரிதல் இருந்தாலே போதும் ஸ்தல சபையும், சபை கூடிவருதலும் எவ்வளவு முக்கியம் என அறிந்து கொள்ளலாம். (எபி.10:24,25) ஸ்தல சபைகளை அற்பமாக கருதும் மனநிலையும் மாறிவிடும்.

பொதுவாக நமது புரிதலுக்காக சொல்வதென்றால், "ஒரு கட்டிடத்தில் கூடும் சபையை ஸ்தல சபை என்கிறோம். அதாவது கிறிஸ்தவத்தை வெளி உலகுக்கு காட்டும் அடையாளமாக ஸ்தல சபையைக் கூறுகிறோம்". அதே கட்டிடத்தில் கூடும் இரட்சிக்கப்பட்டவர்களை **அதரிசனமான சபை** என்கிறோம். இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அனுதினமும் சபையில் சேர்த்துக் கொண்டு வந்தார் என்ற வசனத்தின் பொருள் என்ன? இரட்சிக்கப்பட்ட கூட்டமான அதரிசன சபை, ஸ்தல சபையான எருசலேம் சபையில் கூடியதையும் உள்ளடக்கியே சபையில் சேர்த்தார் என்று பார்க்கிறோம் (அப்.2:47).

அதரிசனமான சபையை உயர்த்தியும், ஸ்தல சபை குறைவுள்ளது என்கிற அர்த்தத்திலும் இங்கு எருசலேம் ஸ்தல சபை சொல்லப்படவில்லை என்பதை கவனிக்கவும்.

அதரிசனமான சபைக்கு பொருத்தமான எந்த ஒரு வாக்குத்தத்தமும் (மத்.16:18), கட்டளையும் (மத்.28:19-20), ஸ்தல சபைகளுக்கு பொருந்தாது எனில் தேவனுடைய ராஜ்யம் விரிவடைவது எப்படி? இப்படி ஸ்தல சபையைக் குறித்த சரியான புரிதல் மிக அவசியம்.

## III. ஸ்தல சபைகளை நாம் பார்க்க வேண்டிய விதம்

எங்கே (ஸ்தல) சபைகள் பெருகி இருக்கின்றனவோ அங்கே கிறிஸ்தவம் தழைக்கிறது என்பதை வட இந்தியா, தென் இந்தியா ஒப்பீட்டின் மூலம் உறுதிப்படுத்தலாம். எனவே பட்டணங்கள்தோறும், கிராமங்கள் தோறும் சபைகள் ஸ்தாபிக்கப்படுவது எவ்வளவு அவசியம் என்பதை உணர முடிகிறது. எனவே தான் பிசாசின் எதிர்ப்பு அதிகளவில் ஸ்தல சபைகள் மேல் இருக்கிறது. இந்த ஆவிக்குரிய யுத்தத்திலிருந்து (Spiritual Warface) பாதுகாக்கப்பட மத்.16:18 வாக்குத்தத்தமாக ஸ்தல சபைகளுக்குத் தேவையில்லையா?

2000 வருட சபை சரித்திரத்தில், சபைக்கு நேரிட்ட உபத்திரவத்தை மறக்க இயலுமா? உபத்திரவத்தை கொடுத்தவர்கள், யாருக்கு உபத்திரவம் கொடுக்க வேண்டுமோ அவர்களைத் தேடி தேடி கண்டு பிடித்தது அதரிசன சபையிலா? இல்லையே. உள்ளூர் சபையின் அடையாளத்தோடு இருந்த ஸ்தேவானைத்தானே இரத்த சாட்சியாக்கினார்கள் (அப்.6:1-8, 7:59).

வேதாகமத்தில் குறிப்பாக பவுலின் நிருபங்களில் அதரிசன சபை போற்றுதலுக் குரியது. ஸ்தல சபைகள் நம்பகத்தன்மையற்றது என்று எங்குமே சொல்லவில்லை. கொரிந்தியரே என்று அழைத்து அவர்களுக்குச் சொல்லும் செய்தி அப்போது செயல்பட்ட உள்ளூர் சபைக்கும் (1கொரி.5:1), பொதுவாக அவர் சொல்லும் அறிவுரைகள் (எபே.4:17). அகில உலக சபைகளுக்கும், அதாவது அதரிசன சபைக்கும் என்று நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

எனவே வேதாகமத்தில் சபைகளுக்கு என்று பொதுவாக சொல்லப்பட்ட வாக்குத்தத்தங்களையும் கட்டளைகளையும் நமது சபைகளுக்கும் உரியதாக சொந்தம் பாராட்டுவோம், அனுபவமாக்குவோம்.

## IV. கர்த்தரின் பார்வையில் சபை

சொல்லப்பட்ட அனைத்து உருவகங்களின் மூலம் கர்த்தருக்கும் சபைக்கும் உள்ள நெருங்கின பிணைப்பு தெரிகிறது. தமது சீஷர்களை-வேலைக்காரர் என்றல்ல இனி நண்பர் என்று அழைப்பதாக கூறி நெருக்கத்தை காட்டியவர் இயேசு.

பரிசுத்தாவியானவர் ஊற்றப்பட்டபோது, இன்னும் நெருக்கமாக கடவுள் தங்களுக்குள் வாசம் செய்பவராக சபை கண்டது. கிறிஸ்துவின் சரீரமாகிய சபை என்ற

உருவகத்தின் மூலம், சரீர உருவம் கொடுக்க முடியாத இயேசு கிறிஸ்துவுக்கு சபையில் இரட்சிக்கப்பட்டவர்களை கிறிஸ்துவின் அவயங்களாகவும் (1கொரி.12:27) சபையை அவரது சரீரமாகவும் சொல்லி மேன்மைப்படுத்தியுள்ளது, கர்த்தர் சபைக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது.

### V. படிப்பினைகள்

- ஒவ்வொரு விசுவாசியும் தான் இருக்கும் சபையில் கர்த்தரே தன்னை கொண்டு வந்து சேர்த்தார் என்று விசுவாசிக்க வேண்டும் (எரே. 3:14,15).
- கிறிஸ்துவின் சாயல் அடையவே சபைக்கு கொண்டுவந்தார் (எபே. 4:11).
- தேவ பிள்ளைகளுக்குரிய ஆசீர்வாதம் பெற்றோம் என்பது விசுவாசியின் இறுதி இலக்கு அல்ல (யோ. 1:12).
- நான் தனித்து அல்ல, ஒரு குழுவாக, சபையாகவே இருந்து செயல்பட்டால் தான் சீஷத்துவத்தில் வளரமுடியும் (அப். 17:11). ஏனென்றால் நான் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் ஒரு அங்கம் மட்டுமே (உறுப்பு). நான் தனித்து செயல்படமுடியாது. ஒரு கைமட்டும் தனித்து செயல்பட முடியுமா? முழு சரீரத்தில், கை இருக்க வேண்டிய இடத்தில் இருப்பதும், செயல்படுவதும் தானே இயல்பானது (1கொரி. 12:12-27).

**● இப்போது புரிகிறதா?**

சபைக்குள் வந்துவிட்டேன், இரட்சிக்கப்பட்டேன், அபிஷேகம் பெற்றேன் என்று சொல்லியும், சபை என்னும் சரீரத்தில் தானும் ஒரு அவயவம் தான் என்று கண்டு பிடிக்க தவறியவர்கள், ஒரு உள்ளூர் சபையில் அங்கத்தினராக இருந்தாலும் குழுவாக செயல்படுவது இல்லை. சபைக்கு பிரயோஜனமாக இருப்பதும் இல்லை. அப்படிப்பட்ட மக்கள் ஒருபோதும் சீஷராவதில்லை, தனித்தே இருப்பவர்கள் நூதன சீஷராகிறார்கள். தன்னிச்சையாய் செயல்படுகிறவர்கள் ஏதோ ஊழியம் செய்வது போல் காணப்பட்டாலும், இப்படிப்பட்டவர்கள் சபை என்னும் சரீரத்தில் தேவையற்ற வீங்கின உறுப்பாகவோ, அழுகின உறுப்பாகவோ இருப்பார்கள். இதுபோன்று ஒவ்வொரு உருவகத்திலும் ஏராளமான படிப்பினைகள் உள்ளன.

### இறுதியாக

ஸ்தல சபைகளின் முக்கியத்துவம் அறியும் போதே சபை ஸ்தாபித்தல், சபைகள் வளர்ந்து பெருகுதல் போன்ற எழுப்புதல்களை மீண்டும் காணமுடியும். சபையின் முக்கியத்துவம் அறியும் போதே விசுவாசிகளின் சபை கூடிவருதல், சபைக்கு பிரயோஜனமாக மாறுதல் போன்றவை மேலும் அதிகரிக்கும்.

---


## பரிபூரண ஜீவன் பத்திரிக்கை சந்தா மற்றும் உதவித் தொகை அனுப்ப வேண்டிய விபரம்

குறிப்பு: காசோலை / டிராப்ட் எடுக்கும்போது Tamil District Council of SIAG என்று எடுத்து பரிபூரண ஜீவன் பத்திரிக்கைக்கு என்று குறிப்பிட்டு அனுப்பவும். மணியாடர் அனுப்புவதை தவிர்க்கவும். பத்திரிக்கை ஊழியத்திற்கு மணியாடர் மூலம் தான் அனுப்ப முடியும் என்ற நிலையில் உள்ளவர்கள் கீழ்காணும் முகவரிக்கு அனுப்பவும்.

**ஏ.ஜி. தலைமை அலுவலகம்**

30, நாவலர் நகர், மதுரை-625 016. போன் : 0452 4200664

ஊழிய அழைப்பு பெற்ற
பெண்களுக்கான ஓர் அரிய வாய்ப்பு

# திரித்துவ வேதாகமக் கல்லூரி

(A Theological Institution of the Tamil District Council of SIAG)
Accredited by Asia Theological Association (ATA)

திரித்துவ வேதாகமக் கல்லூரி, மாணவிகள் தங்கி படிப்பதற்கான
சிறந்த, நவீன வசதிகளைக் கொண்டுள்ளது.
அர்ப்பணிப்புள்ள சிறந்த கல்வித் தகுதியுடைய ஆவிக்குரிய
அனுபவமிக்க ஆசிரியர்களைக் கொண்டு போதிக்கப்படுகிறது.

| Course | Duration | Eligibility |
|---|---|---|
| Diploma in Theology (Dip.Th.) - Tamil | 2 Years | S.S.L.C Pass |
| Bachelor of Theology (B.Th.) - English | 3 Years | HSC (+2) Pass |
| Master of Divinity (M.Div.) English | 3 Years | Any Bachelor Degree |

2023 - 2024-ம் கல்வியாண்டிற்கான மாணவியர் சேர்க்கை
நடைபெற்று கொண்டிருக்கிறது.
விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்பப் படிவங்களை
பதிவிறக்கம் செய்துகொள்ள வேண்டிய இணையதள முகவரி
www.trinitybiblecollege.in

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் வந்து சேர வேண்டிய
**கடைசி நாள் : மே 30, 2023**

தொடர்பு : The Registrar
**Trinity Bible College**
Kanakkapillaivasai, Post Box No. 25, Sengottai - 627 809
Phone : 04633 - 234243 & 99942 47117, 75985 43752



# கர்த்தருக்கு கொடுக்கும் காணிக்கை

Rev. V.J. பாலஸ்
தலைமைப் போதகர், சிமிர்னா A.G. சபை, வண்ணாரப்பேட்டை

கர்த்தரிடத்திலிருந்து ஆசீர்வாதங்களை பெறுகிற நாம் நம்முடைய ஆசீர்வாதத்திலிருந்து மேன்மையானதை கர்த்தருக்கு கொடுப்பது மிகவும் அவசியமானதாகும். ஆதியாகமத்தில் நாம் பார்க்கும்போது கர்த்தருக்கு முதலாவது காணிக்கை செலுத்திய காயினும் ஆபேலும் நமக்கு திருஷ்டாந்தமாய் இருக்கிறார்கள். கர்த்தர் காயினுடைய காணிக்கையை அங்கீகரிக்கவில்லை. ஆபேலுடைய மேன்மையான காணிக்கையை அங்கீகரித்து அவனுக்கு மறு உத்தரவு அருளினார். ஆகவே நம்முடைய வாழ்விலும் அப்படிப்பட்ட மேன்மையான காணிக்கை பலியை கர்த்தருக்கு செலுத்தும்போது நாம் கர்த்தரிடத்திலிருந்து மேன்மையான ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ள முடியும். ஆகவே, கர்த்தருக்கு எப்படிப்பட்ட காணிக்கைகளை எப்படி கொடுக்க வேண்டும் என்பதை இந்த நாளிலே தியானிப்பது நமக்கு ஆசீர்வாதமாக இருக்கும்.

### மனப்பூர்வமாய் கொடுப்பது:

யாத்திராகமம் 35:29 **“செய்யப்படும்படி கர்த்தர் மோசேயைக்கொண்டு கற்பித்த வேலைக்குரிய யாவையும் கொண்டுவர, இஸ்ரவேல் புத்திரருக்குள் தங்கள் இருதயத்தில் உற்சாகமடைந்த ஸ்திரீ புருஷர் யாவரும் கர்த்தருக்குக் காணிக்கையை மனப்பூர்வமாய்க் கொண்டுவந்தார்கள்”.**

ஆசரிப்புக்கூடாரத்தைக் கட்டும்படி கர்த்தர் மோசேக்கு கட்டளையிட்டார். அதற்கு தேவையான வெள்ளி பொன் மற்றும் கூடார வேலைக்குத் தேவையான அனைத்து பொருட்களையும் இஸ்ரவேல் புத்திரரிடத்தில் கேட்கும்படி மோசேயினிடத்தில் தேவன் கட்டளையிட்டார். மேலும் எப்படிப்பட்ட காணிக்கையை இஸ்ரவேல் புத்திரரிடத்திலிருந்து ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் தேவன் மோசேக்கு கற்றுக்கொடுத்தார் (யாத்திராகமம் 25:2) இஸ்ரவேல் புத்திரரும் தேவன் மோசே மூலமாக சொல்லிய வார்த்தையின்படி கர்த்தருக்கு மனப்பூர்வமாய் காணிக்கை கொடுத்தார்கள். அதினால் மோசே தேவன் சொல்லியபடி ஆசரிப்புக்கூடாரத்தை உருவாக்க முடிந்தது. ஆகவே இந்த நாட்களில் நாம் கர்த்தருடைய சபையை கட்டுவதற்கு தேவன் தமது ஊழியர்களுக்கு கொடுத்த ஆலோசனைக்கு நாம் கீழ்படிந்து கர்த்தருக்கு காணிக்கையை மனப்பூர்வமாய் கொடுக்க வேண்டும் அதாவது முழு மனதோடு கொடுக்க வேண்டும். அப்படிப்பட்ட காணிக்கையை மாத்திரமே கர்த்தர் ஏற்றுக்கொண்டு நம்மை ஆசீர்வதிப்பார்.

### உற்சாகமாய் கொடுப்பது:

2கொரி.9:7 **“உற்சாகமாய் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்”.** நம்மில் அநேகர் கர்த்தருக்கு காணிக்கை செலுத்துகிறோம். தேவன் நமது காணிக்கையை ஏற்றுக்கொண்டாரா இல்லையா என்பதைக்குறித்து நம்மில் அநேகர் சிந்திப்பதில்லை. தேவன் நம்முடைய காணிக்கையை ஏற்றுக்கொண்டு நம்மை ஆசீர்வதிக்க வேண்டுமானால் நாம் ஒவ்வொரு முறை கர்த்தருக்கு கொடுக்கும்போதும் உற்சாகமாக கர்த்தருக்கு கொடுக்க வேண்டும் அப்படி யார் யார் உற்சாகமாக கொடுக்கிறார்களோ அப்படிப்பட்டவர்கள் மேல் கர்த்தர் பிரியமாயிருக்கிறார். அவர்களுடைய காணிக்கையை கர்த்தர் ஏற்றுக்கொள்கிறார்.

### உதாரத்துவமாய் கொடுப்பது:

2 கொரி.8:2 **“தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள்”.** உதாரத்துவம் எனப்படுவது தாராள மனதோடு கொடுப்பதைக் காட்டுகிறது. மக்கெதோனியா சபைக்கு கர்த்தர் கொடுத்த கிருபை என்னவென்றால்

அவர்கள் மிகுந்த உபத்திரவத்தினாலே சோதிக்கப்பட்ட நாட்களிலும் கொடிய தரித்திரமுடையவர்களாயிருந்தும் கர்த்தருக்கு கொடுக்க வேண்டும் என்று பவுல் அவர்களுக்கு சொன்னபோது அவர்கள் மிகுந்த சந்தோஷமடைந்து கர்த்தருக்கு தாராளமாக தங்கள் பொக்கிஷத்தை திறந்து உதாரத்துவமாக கொடுத்தார்கள். இப்படி அவர்கள் கொடுத்ததைக் கண்டு தேவன் அவர்களுக்கு கொடுத்த கிருபையை குறித்து பவுல் மிகுந்த ஆச்சரியமடைந்து கர்த்தரை துதித்தார். ஆகவே இந்த கடைசி நாட்களில் சபைகளைக் கட்டுவதற்கு தேவைகள் நிறைந்த இந்த நாட்களில் அப்படிப்பட்ட கிருபையை தேவன் நமக்கு கொடுக்க வேண்டும் என்று வேண்டிக்கொள்வோமாக.

**உத்தம இருதயத்தோடு கொடுக்க வேண்டும்:**

1 நாளாகமம் 29:16&17 **"என் தேவனே, நீர் இருதயத்தைச் சோதித்து, உத்தம குணத்தில் பிரியமாயிருக்கிறீர் என்பதை அறிவேன்; இவையெல்லாம் நான் உத்தம இருதயத்தோடே மனப்பூர்வமாய்க் கொடுத்தேன்"**

கர்த்தருக்கு காணிக்கை செலுத்த வேண்டுமானால் அதற்கு சில தகுதிகளைக் கர்த்தர் எதிர்பார்க்கிறார். மனுஷனோ முகத்தைப் பார்க்கிறான் கர்த்தரோ இருதயங்களை சோதித்து அறிகிறார். அவர் நம்முடைய இருதயங்களை சோதித்து நம்முடைய உத்தம குணத்திலே பிரியமாயிருக்கிறார். உத்தம இருதயத்தோடு நாம் காணிக்கை செலுத்தும்போது அந்த காணிக்கையை கர்த்தர் ஏற்றுக்கொள்கிறார். மத்தேயு 5:23&24ல் வாசிக்கும்போது நாம் நம்முடைய காணிக்கையை செலுத்த வரும்போது நம்முடைய சகோதரனிடத்தில் முதலாவது ஒப்புரவானபின்பு காணிக்கை செலுத்த வேண்டும் என்று இயேசு வலியுறுத்துகிறார். ஆகவே தேவன் காணிக்கையை ஏற்றுக்கொள்ளும் முன்பு காணிக்கை செலுத்த வருபவருடைய வாழ்க்கையை கவனிக்கிறார். ஆகவே தேவனுக்கு காணிக்கை செலுத்தும்முன் நாம் நம்முடைய வாழ்க்கையை தேவனுக்கு ஒப்புக்கொடுத்து அவருடைய வசனத்திற்கு கீழ்படிந்து உத்தம இருதயத்தோடு அவருக்கு பிரியமான காணிக்கையை செலுத்த வேண்டும்

**உண்மையாய் கொடுக்க வேண்டும்:**

2 நாளாகமம் 31:12 **"அவைகளிலே காணிக்கைகளையும், தசம பாகத்தையும், பரிசுத்தம்பண்ணப்பட்டவைகளையும் உண்மையாய் எடுத்துவைத்தார்கள்;** நாம் நம்முடைய காணிக்கையை கர்த்தருக்கு செலுத்தும்போது உண்மையாய் செலுத்துவது மிகவும் அவசியமாகும். கர்த்தரிடத்தில் நாம் எதையும் மறைக்க முடியாது அவர் சர்வத்தையும் அறிந்தவர். நாம் கர்த்தரிடத்தில் எதையாகிலும் மறைக்க நினைத்தால் நம்மை நாமே ஏமாற்றுகிறோம் என்பது அர்த்தமாகும். கர்த்தரிடத்தில் உண்மையை மறைத்து பொய் நாடகமாடிய அனனியாவும் சப்பீராளும் கர்த்தருடைய கோபத்திற்கு ஆளானார்கள். (அப்போஸ்தலர் 5:1-10) ஆகவே கொடுப்பதில் நாம் கர்த்தருக்கு உண்மையாக இருப்போம்.

**தகுதிக்கு ஏற்ற காணிக்கையை கொடுக்க வேண்டும்:**

உபாகமம் 16:17 **"அவனவன் தன் தன் தகுதிக்கு ஏற்றபடி காணிக்கையைக் கொண்டு வரக்கடவன். கர்த்தருக்கு காணிக்கையை செலுத்தும்போது தேவன் நம்மை ஆசீர்வதித்த ஆசீர்வாதத்திற்குத்தக்கதாக நாம் காணிக்கை செலுத்த வேண்டும்"** (லூக்கா 21:1-4). இயேசு தேவாலயத்திற்கு வந்தபோது அங்கே அநேகர் கர்த்தருக்கு காணிக்கை செலுத்தினார்கள். கர்த்தருக்கு அநேகர் காணிக்கை செலுத்தியபோதும் இயேசு வெறும் 2 காசுகளை காணிக்கையாக செலுத்திய விதவையை மிகவும் பாராட்டினார். ஏனென்றால் அங்கு காணிக்கை செலுத்தின அநேகர் தங்கள் பரிபூரணத்திலிருந்து கொடுத்தார்கள். ஆனால் அந்த ஏழை விதவை தன் ஜீவனத்திற்காக வைத்திருந்த அந்த முழு பணத்தையும் காணிக்கையாக செலுத்திவிட்டாள். ஆகவே நாம் எவ்வளவு கொடுக்கிறோம் என்பது முக்கியமல்ல நாம் எப்படிப்பட்ட நிலைமையிலிருந்து எவ்வளவு கொடுக்கிறோம் என்பதே முக்கியமானதாகும்.

ஆகவே நாம் தேவனிடத்திலிருந்து உன்னதமான ஆசீர்வாதத்தைப் பெற வேண்டுமானால் நாமும் தேவனுக்கு நம்மிடத்திலிருக்கிற மேன்மையான காணிக்கை தசமபாகங்களை மனப்பூர்வமாகவும், உற்சாகமாகவும், உதாரத்துவமாகவும், உத்தம இருதயத்தோடும், உண்மையாகவும், தகுதிக்கு ஏற்பவும் கொடுப்போம்.



# பராக்கிரமசாலியே!


Rev. J. சாமுவேல் ஜெபராஜ்

செயலாளர், தமிழ் பிரதேச ஆண்கள் ஐக்கியம்


கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் பரிபூரண ஜீவன் வாசகர்கள் யாவருக்கும் தமிழ் பிரதேச ஆண்கள் ஐக்கியத்தின் சார்பில் அன்பின் வாழ்த்துக்கள்!

பிரதேச ஆண்கள் ஐக்கிய தலைவர்கள், பிராந்திய தலைவர்கள், 71 மண்டல பொறுப்பாளர்களை உங்கள் ஜெபங்களில் நினைத்துக் கொள்ளுங்கள். தேவன் உங்களைப் பார்த்து "பராக்கிரமசாலியே" என கூறுகிறார். இன்றைய சூழ்நிலையில் நீங்கள் பலவித பிரச்சனைகள், பயங்கள், போராட்டங்களை சந்தித்துக் கொண்டிருக்கலாம். உங்களை குறித்த தேவனுடைய பார்வை மிகவும் விஷேசித்ததாக உள்ளது. உங்கள் சூழ்நிலைகளை அறிந்த தேவன் உங்களுக்கு என்ன செய்ய போகிறார் என்றும், உங்களைக் கொண்டு என்ன செய்ய போகிறார் என்பதையும் அவர் தெளிவாக அறிந்து உள்ளார்.

நியாயாதிபதிகள் 6:12 – பராக்கிரமசாலியே கர்த்தர் உன்னோடே இருக்கிறார் என்றார்.

**1. நம்மை நமக்கு காண்பிக்கும் தேவன்:**

நாம் யார் என்று சரியாக தெரிந்து கொள்ளப்பட்டதில் பயமும், கவலையும், தாழ்வு மனப்பான்மையும் நம்மை மேற்கொள்ளும். கிதியோன் தான் யார் என்பதை அறியாதிருந்தான். தேவன் அவனுக்கு அவனை பராக்கிரமசாலியாக காண்பித்தார். சிலர் வெளியே பராக்கிரமசாலியைப் போல இருப்பார்கள். ஆனால் உள்ளுக்குள்ளே கவலை நிறைந்ததாக காணப்படுவர். (எடுத்துக்காட்டாக நாகமான் சீரியருடைய தளபதி ஆனால் உள்ளே குஷ்டரோகம் உள்ளவனாக இருந்தான்). இதை வாசிக்கிறவர்களே கிதியோனுக்கு அவனை காண்பித்த தேவன் இன்று உங்களுக்கு சொல்லுகிற காரியம் நீங்கள் பராக்கிரமசாலி என்பதே. சூழ்நிலையை வைத்து எந்த முடிவுக்கும் வந்துவிடக்கூடாது.

**2. தேவ திட்டத்தை நமக்கு காண்பிக்கும் தேவன்:**

தன்னை காப்பாற்றவும், தனக்குறியதை காப்பாற்றவும் பிரயாசப்பட்டுக் கொண்டிருந்த கிதியோனைப் பார்த்து பிதாவானவர் நீ மீதியானியரை முறியடிக்க வேண்டும் என்ற திட்டத்தை காண்பித்தார். இதுவரை உங்கள் வாழ்வில் உங்களுக்காக நீங்கள் வாழ்ந்து கொண்டிருக்கலாம். ஆனால் தேவன் உங்களை எதற்காக இரட்சித்தார், எதற்காக அபிஷேகம் பண்ணினார் என்பதை உங்களுக்கு நிச்சயம் வெளிப்படுத்துவார். தமஸ்கு வீதியில் தேவன் பவுலுக்கு அவனைக்குறித்த தேவ திட்டத்தை வெளிப்படுத்தினார். இதை வாசிக்கிறவர்களே நிச்சயம் தேவன் உங்களோடு இடைபடுவார்.

**3. தேவ நடத்துதலை கொடுக்கும் தேவன்:**

திட்டம் கொடுக்கிற தேவன் அதை எப்படி செய்ய வேண்டும் என்ற நடத்துதலையும் தருவார். கிதியோனுக்கு திட்டம் கொடுத்த தேவன் எப்படி யுத்தம் செய்ய வேண்டும், என்னென்ன பொருட்களை பயன்படுத்த வேண்டும் என்பதையும் தெளிவாக கூறினார். இதை வாசிக்கிறவர்களே தேவ நடத்துதலை தெளிவாகப் பெற்றுக் கொள்ளுங்கள். உங்களுக்கு பல அனுபவங்கள் இருக்கலாம். பலர் பல ஆலோசனைகளை உங்களுக்கு சொல்லலாம். ஆனால் தேவ நடத்துதல் தான் மகத்தான வெற்றியை காணச் செய்யும்.

# Antioch Biblical Seminary & College

Affiliated with Tamil District Council of SIAG

Accredited by Asia Theological Association (ATA)

## M.Th. Program : *A Non - Residential* Course in Christian Theology

***Wanted : Residential Faculty with M.Th./Ph.D. (ATA / Serampore) in any discipline. (North Indians Preferred)***

| Courses | Duration | Qualification |
|---|---|---|
| B.Th. | 3 Years | 12th Pass |
| M.Div. | 2/3 Years | B.Th (ATA) / any University Degree |
| Dip.Th. | 2 Years | 10th Pass |





## College Reopens on the 1st of June 2023

The Registrar

**ANTIOCH BIBLICAL SEMINARY & COLLEGE**

Post Box -05, Pondicherry University, Pillaichavady, Mathur Road, Puducherry - 605 014
Office Phone : (0413) 2970521/22/23 | Cell : 098652 09821 | EMail: abscollege@gmail.com
Website : www.antioch.in



# நாம் தேசத்திற்கு காவலாளிகள்


Rev. A. எட்வின் பிரபாகர்

இயக்குநர், வடகிழக்கு மிஷனரி ஊழியங்கள்

TAMIL DISTRICT MISSIONS India and beyond...


தமிழ் பிரதேச வடகிழக்கு மிஷன் இலாக்கா மூலமாக பரிபூரண ஜீவன் பத்திரிக்கை வாசகர்களுக்கு அன்பான வாழ்த்துக்கள். 2023-ம் ஆண்டில் மறுபடியும் தங்களோடு தொடர்பு கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். இந்திய தேசத்திற்காக பாரப்பட்டு ஜெபிக்கிறவர்களாக, மிஷன் ஊழியங்களை தாங்குபவர்களாக, செய்பவர்களாக தீவிரப்படுவதைக் குறித்து மகிழ்ச்சியடைகிறோம்.

நாம் வாழும் காலம் கடைசிகாலம், கொடியகாலம், வருகையின் காலம் என்பதை விடளத்தின் மூலமும், தேச நிகழ்வுகளைக் கொண்டும் அறிந்து மிகுந்த பாரத்தோடு, அர்பணத்தோடு, தரிசனத்தோடு செயல்பட ஒவ்வொருவரையும் அழைக்கிறோம் (எசே.38:7). எசேக்கியல் தீர்க்கதரிசிக்கு கொடுக்கப்பட வசனத்தின் பாரம் நீ அவர்களுக்கு காவலனாயிரு என்பதே.

### இந்திய தேசத்தின் காவலாளர்கள் நாம்

நம் வாழ்நாளில் இயேசுகிறிஸ்துவை கேள்விப்படவும், அறியவும், அனுபவிக்கவும், ஆசீர்வதிக்கப்படவும் தேவன் நமக்கு கிருபைச் செய்தார். இன்று இயேசு நம்மிடம் எதிர்பார்ப்பது என்ன? பிறருக்கு காவலாளனாயிரு தேசத்திற்கு காவலாளனாயிரு. இந்தியாவின் 140 கோடி ஜனங்களும் நம்மைப் போல கிறிஸ்துவின் ஆசீர்வாதங்களை பெற்று நித்திய ஜீவனைபெறும் வரை தீவிரமாய் நான் ஒரு காவலாளி என்ற உணர்வோடு செயல்பட உங்களை புதிய ஆண்டில் பாரப்பட அழைக்கிறேன். தரிசனம் பெற்று எழுந்து கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவிப்போமாக! இன்று அநேகர் வந்து போகிறவர்களாக இருக்கிறோம். இன்றும் சிலர் நாம் மாத்திரம் ஆசீர்வதிக்கபடுவதில் கவனம் செலுத்துகிறோம். நாம் ஏன் தேசத்தின் காவலாளிகளா? சபைக்கு வெளியே பெரும் கூட்டம் கிறிஸ்துவை பெற்றுக் கொள்ளவில்லையே? ஆதி.4:9 கர்த்தர் காயீனிடம் சகோதரனைக் குறித்து வினவியதற்கு நான் அறியேன், என் சகோதரனுக்கு நான் காவலாளியோ? என்றான். உடன் பிறந்த சகோதரன்மேல் எரிச்சல் கொண்டு, கொலை செய்த காயீன் சொன்ன வார்த்தை இது? எத்தனை வேதனை? அழியும் ஜனங்களுக்காக பாரப்படாமல் இருப்பதற்கு பல காரணங்கள் நம்மிடம் இருக்கலாம்? காயீனைப் போன்று வாழாதிருங்கள். எசேக்கியேல் தீர்க்கதரிசியைப் போல காவலாளியாய் இருக்க தீர்மானியுங்கள்.

## காவலாளியாய் இருக்கிறது எப்படி ?

### 1. ஜெபியுங்கள்

தேசத்திற்காக ஜெபிக்கிறவர்கள் உண்மையான காவலாளிகள் (எசே.22:30). நம் தேசத்தை அழிக்காதபடிக்கு திறப்பில் இருக்கவும், சுவரை அடைக்கவும் தக்க ஒரு மனுஷனைத் தேடினேன் ஒருவனையும் காணேன். தமிழ்நாடு அசெம்பிளி காட் சபையிலுள்ள இலட்சக்கணக்கான விசுவாச மக்கள் தேவனைத் தேடி திறப்பில் நிற்கும் நபராய் தேசத்திற்காக ஒரு மணி நேரமாவது ஜெபிக்க தீர்மானித்து 2023-ல் செயல்படுவீர்களாக? சிரியா, துருக்கி நாடுகளில் மிக பெரிய பூமி அதிர்ச்சியினால் பல்லாயிரங்கள் மாண்டு போயிற்றே? நரக அழிவை நோக்கி செல்லும் இந்திய மக்களுக்காக ஜெபித்த, தப்புவித்து காவலாளனாய் செயல்படுவீர்களாக? நீங்கள் விஷேசித்தவர்கள் எசே.21:6 எசேக்கியேல் தீர்க்கதரிசியைப் பார்த்து காவலாளனாகிய நீ

இடுப்பு நொறுங்கும்படி பெருமூச்சுவிடு என்றார். எத்தனை அதிகமாய் நாம் ஜெபிக்க வேண்டும். ஜெபிப்போமாக! தேசத்தை சந்திப்பார்! இரட்சிப்பார்! எழுப்பதல் உண்டாகும்!.

**2.தேவ வார்த்தையைக் கேட்டு அறிவித்தவன்**

எசே.16-17 காவலாளி என்பவர் 18,17 வசனத்தைப் பார்த்தால் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு, நம் வாயினால், அவர் நாமத்தில் எச்சரித்து அறிப்பனேயாகும். இதில் மூன்று விதத்தில் இதை அறிவிக்க வேண்டும். சகல ஜனங்களுக்கும், துன்மார்க்கத்தில் இருப்பவருக்கும், நீதிமானாய் இருந்து பாவம் செய்பவனும் அறிவிக்கும் காவலாளியாய் தேவன் வைத்துள்ளார். தமிழ்நாடு சபைகள் மிஷன் ஊழியம் மூலம் வட மாநிலங்களுக்கு வந்து சகல ஜனங்களுக்கும், இயேசுவின் மனம்திரும்புதலையும், பாவ மன்னிப்பையும், விடுதலை வாழ்வையும், நித்திய ஜீவனையும் அறிவிப்பீர்களாக!. சபையாய் எழுந்து அறிவிப்போம்! நாம் கிறிஸ்துவின் காவலாளிகள்.

**3.பலன் பெறுவீர்கள்**

ஜெபத்தோடு, தரிசனத்தோடு, தியாகத்தோடு சுவிஷேசப் பணி செய்கிற காவலாளிகள் பலன் பெறுவார்கள் (சங்.2:8). ஜாதிகளை, பூமியின் எல்லைகளைத் தருபவர். இந்தியாவையும் சந்திப்பார், இரட்சிப்பார். ஊழியம் செய்கிற நீங்கள் தேவனால் கனப்படுத்தப்படுவீர்கள். கிரியைகளுக்கு நிறைவானப் பலன் உண்டு. மகிமை வித்தியாசமாய் இருப்பீர்கள். நல்லது என்று எஜமான் இயேசுவின் பாராட்டையும் பெறுவீர்கள். நாம் கிறிஸ்துவின் காவலாளிகள்! தேசத்தின் காவலாளிகள்! கர்த்தர் உங்களோடு இருப்பாராக! ஆமென்.

**வடகிழக்கு மிஷன் ஊழிய ஜெபக் குறிப்புகளுக்காக தயவுசெய்து ஜெபிக்கவும்**

## தமிழ் பிரதேச மிஷன் மாநிலங்கள்



1. நமது பிரதேசத்தின் வடகிழக்கு மிஷன் இலாக்காவிற்குட்பட்ட கீழ்க்கண்ட 16 மாநிலங்களில் எழுப்புதல் உண்டாக, ஜனங்கள் கர்த்தரை அறிந்து கொள்ள:

1.அருணாச்சல பிரதேசம்; 2.அஸ்ஸாம்; 3.சீக்கிம்; 4.மிசோரம்; 5.மணிப்பூர்; 6.மேகாலயா; 7.திரிபுரா; 8.நாகலாந்து; 9.மேற்கு வங்காளம்; 10.சட்டீஸ்கர்; 11.ஒடிசா; 12.பீஹார்; 13.ஜார்கண்ட்; 14.ஆந்திர பிரதேசம்; 15.தெலுங்கானா; 16.அந்தமான் நிக்கோபார் தீவுகள்.

2. தற்போது வட மாநிலங்களில் நாம் தாங்கி வரும் 641 மிஷனரிகளின் குடும்பங்களுக்காக, அவர்களின் ஊழிய வளர்ச்சிக்காக.
3. அடுத்த பத்து ஆண்டுகளான எழுப்புதலின் பத்தாண்டு இலக்கின்படி நாம் அனுப்ப வேண்டிய மொத்தம் 600 மிஷனரிகளில் இந்த வருடத்தில் மட்டும் 60 மிஷனரிகளை தேவன் எழுப்ப, இந்த மிஷனரிகளை தாங்குகிறவர்களைக் கர்த்தர் ஏற்படுத்த.
4. வடமாநில மிஷன் ஊழியங்களுக்காக மாதந்தோறும் தேவைப்படும் 30 லட்சத்திற்கும் அதிகமான பணத் தேவைகளைக் கர்த்தர் சந்திக்க.
5. நமது மண்டலத்தின் அனைத்து சபைகளுக்குள்ளும் மிஷன் ஊழிய பாரமும் தரிசனமும் பெருக, விசுவாசிகள் மிஷன் ஊழியங்களுக்காக ஜெபிக்க, கொடுக்க, அனுப்ப, செல்ல உற்சாகமடைய.
6. தேவையுள்ள வடமாநில மிஷன் பணித் தளங்களில் இடங்கள் வாங்கப்பட ஆலயங்கள் கட்டப்பட.
7. வடகிழக்கு மிஷன் இலாக்காவின் அனைத்து மத்திய மற்றும் மண்டல பொறுப்பாளர்களின் சுகத்திற்காக, பெலனுக்காக, ஊக்கமான மிஷன் பணிகளுக்காக.

---

## ஈஸ்டர் ஞாயிறு வருடம் தோறும் மாறி மாறி வெவ்வேறு தினங்களில் வர காரணம் என்ன?

வெந்து நாட்கள் என்பது சாம்பல் புதன் கிழமையிலிருந்து ஈஸ்டர் ஞாயிறுக்கு முந்தைய நாள் வரை மொத்தம் 46 நாட்கள் இதில் 6 ஞாயிற்றுக்கிழமைகள், ஞாயிற்றுக்கிழமை ஆண்டவர் உயிர்ந்தெழுந்த வெற்றியின், மகிழ்ச்சியின் நாள் என்பதனால் அன்று மனம் வருந்தி நோன்பிருக்கத் தேவை இல்லை என்று திருச்சபை அந்த 6 நாட்கள் உபவாச நாட்களாக சேர்க்கவில்லை. மீதமுள்ள 40 நாட்கள் நோன்பு நாட்களாக ஆசரிக்கின்றனர்.

இந்த சாம்பல் புதன்கிழமை ஆனது ஒவ்வொரு வருடமும் பிப்ரவரி 4-லிருந்து மார்ச் 10 வரை மாறி மாறி வரும். அதுபோலத்தான் ஈஸ்டர் ஞாயிறும் மார்ச் 22 முதல் ஏப்ரல் 25 வரை மாறி மாறி வரும்.

### ஏன் இவ்வாறு மாறி மாறி வருகிறது?

பஸ்கா பண்டிகை கொண்டாடப்பட்டு கொண்டிருந்த வாரத்தில்தான் ஆண்டவர் இயேசு பாடுபட்டு, மரித்து, அடுத்த வாரத்தின் முதலாம் நாள் காலையில் (அதாவது இஸ்ரவேலரின் ஓய்வு நாளாகிய சனிக்கிழமைக்கு அடுத்த நாள்) உயிர்த்தெழுந்தார். ஆகவே நாம் இயேசு உயிர்த்தெழுந்த நாளை நினைவுகூறத்தக்கதாக ஞாயிறன்று ஈஸ்டர் பண்டிகையைக் கொண்டாடுகிறோம்.

எகிப்தின் அடிமைத்தனத்தில் இருந்து இஸ்ரவேலர் விடுதலையாகி, பஸ்கா உண்டு (புசித்து), புறப்பட்ட அன்று அது ஒரு முழு நிலவு நாளாக இருந்தது. (இஸ்ரவேலின் பண்டிகைகள் அனைத்துமே நிலவை மையமாகக் கொண்டதாக உள்ளது. ஏனெனில் இஸ்ரவேலர் நிலவை மையமாக கொண்ட ஆண்டை (Lunar Year) பின்பற்றினார்கள்.

கி.பி 125 இல் கூடிய நிசேயா பெருமன்றத்தின் தீர்மானத்தின்படி ஈஸ்டர் ஞாயிறு கணிப்பு அறிவிக்கப்பட்டது. அதாவது இரவும் பகலும் சமமாயுள்ள மார்ச் 21 ஆம் தேதிக்குப் பின்வரும் முழுநிலவுக்கு அடுத்த ஞாயிறுதான் ஈஸ்டர் என்று அறிவிக்கப்பட்டது. அந்த முழு நிலவு மாறி மாறி வருவதால் ஈஸ்டர் ஞாயிறு தேதி மாறி மாறி வரும் பண்டிகையாக உள்ளது.



## REGULAR FULL TIME COURSES

### முழு நேர பயிற்சி வகுப்புகள்

முழு நேர ஊழியத்திற்கு அர்ப்பணித்திருக்கும் சகோதரர்களுக்கு

போதனை மொழி: தமிழ்

- இறையியல் பட்டப்படிப்பு
  (Bachelor of Theology) (ATA)
  தகுதி: 12ம் வகுப்பு காலம்: 3 ஆண்டுகள்
- இறையியல் டிப்ளோமா
  (Diploma in Theology) (ATA)
  தகுதி: 10ம் வகுப்பு காலம்: 2 ஆண்டுகள்
- இறையியல் சான்றிதழ்
  (Certificate in Theology)
  தகுதி: 10ம் வகுப்புக்கு கீழ் காலம்: 2ஆண்டுகள்

**முறையான வேதாகம கல்வி கற்க ஓர் அரிய வாய்ப்பு**

## EVENING PART TIME COURSES

### பகுதி நேர பயிற்சி வகுப்புகள்

For Both Men and Women

Classes: Monday, Thursday & Friday | 6:30 – 8:30 Pm

போதனை மொழி: தமிழ் மற்றும் ஆங்கிலம்

- MASTER OF ARTS IN CHRISTIAN MINISTRY (ATA)
  Eligibility: Any Degree | Duration: Two Years
  Medium of Instruction: English
- கிறிஸ்தவ ஊழியம் – முதுகலை (ATA)
  தகுதி: பட்டபடிப்பு காலம்: 2 ஆண்டுகள்

## EVENING PART-TIME ONLINE COURSE

### மாலை பகுதி நேர ஆன்லைன் வகுப்பு

- கிறிஸ்தவ ஊழியம் – டிப்ளோமா
  தகுதி: 10ம் வகுப்பு காலம்: 2 ஆண்டுகள்

For further information and application form, please contact
Rev. M. Sampath (Principal, MABC)
Mobile : +91 - 94442 87322

**MADRAS ASSEMBLIES OF GOD BIBLE COLLEGE**

No. 191 (New No. 6), Anna Salai,
Little Mount, Chennai – 600 015, TN.
Phone: 044 – 2235 1646 | 2235 3100
Email: mabc_edu@yahoo.com



# வெற்றியை நோக்கி

## TOWARDS VICTORY

**Rev.K. ராஜா**

இயக்குநர், கிறிஸ்துவுக்கு மாணவர் ஊழியம்

"...தானியேலின் காரியமோ ஜெயமாயிருந்தது" (தானி.6:28).

"குதிரை யுத்த நாளுக்கு ஆயத்தமாக்கப்படும். ஜெயமோ கர்த்தரால் வரும்" (நீதி 21:31).

ஆண்டு இறுதித் தேர்விற்கு (பரீட்சைக்கு) மிகத் தீவிரமாக ஆயத்தமாகிக் கொண்டிருக்கும் அன்பான மாணவ மாணவிகளுக்கு, வெற்றி சிறக்கப்பண்ணுகிற ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் மாணவர் ஊழியத்தின் சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

வெற்றியை நோக்கிய உங்களது முயற்சியில் நீங்கள் கவனிக்க வேண்டிய சில குறிப்புகளை வேத வசனத்திலிருந்து தருகிறோம்.

**1. பயப்படாதிருங்கள்: (DO NO AFRAID) ஏசாயா 41:10**

பயம் நம்மை செயல்படவிடாது. படிப்பில் பின்தங்கிய மாணவராகவோ, சராசரி மாணவராகவோ நீங்கள் எந்த நிலையில் இருந்தாலும் பயப்பட வேண்டாம். நீங்களும் வெற்றி பெற முடியும். தேவனுடைய வார்த்தையின் மேல் நீங்கள் வைக்கிற நம்பிக்கை, விசுவாசம் நிச்சயமாக உங்களை வெற்றியின் பாதையில் நடத்தும் என்பதில் சந்தேகமேயில்லை.

அஞ்சி நடுங்கிக் கொண்டிருப்பவனால், சிறிய குட்டையைக்கூட கடக்க முடியாது. - சாணக்கியன்.

"என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாற்றையுஞ்செய்ய எனக்குப் பெலன் உண்டு" (பிலிப்பியர் 4:13).

**2. தீர்மானம் எடுங்கள்: ( TAKE DECISION) தானி. 1:8**

தீர்மானம் எடுப்பது மிக முக்கியம். காரணம், தீர்மானம் நம்மை தைரியப்படுத்தும். நாம் என்ன செய்ய வேண்டும் என்பதைக் குறித்த தெளிவை உண்டாக்கும். தீர்மானம் ஒன்றே நம்மை செயல்பட தூண்டும் ஒரு உந்து சக்தி.

தானியேலின் ஜெயத்திற்குக் காரணம் தீர்மானமே. எதைச் செய்ய வேண்டும். எதைச் செய்யக் கூடாது, நமக்கு என்ன வேண்டும், நாம் எதை சாதிக்க விரும்புகிறோம் என்பதைத் தீர்மானித்து செயல்பட வேண்டும்.

***You cannot make progress without making decisions. Always remember, your decision is the best decision for you and it is the next step of your future.***

**3. கட்டுப்பாடுடன் இருங்கள்: (BE CONTROL YOURSELF) தானி. 1:8**

தானியேல் எதை சாப்பிட வேண்டும், எதை சாப்பிடக்கூடாது என்ற கட்டுப்பாட்டை தனக்கு வைத்துக் கொண்டார். அதைப் போல வெற்றியை நோக்கிய உங்கள் முயற்சியில் எது உங்களுக்குத் தேவை, எது தேவையில்லை, எதை பார்ப்பது, எதைப் பார்க்கக்கூடாது, எங்கே போவது, எங்கே போகக் கூடாது, எதில் நேரம் செலவிட வேண்டும், எதில் நேரம் செலவிடக்கூடாது என்ற கட்டுப்பாட்டுடன்

இருந்து செயல்படுங்கள். வெற்றியை நோக்கிய உங்களது முயற்சியில் முன்னேறுவீர்கள்.

**4. உண்மையுடன் இருங்கள் (BE FAITHFUL) தானி. 6:4**

தானியேல் தனக்கு கொடுக்கப்பட்ட வேலையில் யாரும் குற்றம் கண்டுபிடிக்க முடியாத அளவிற்கு உண்மையுள்ளவராக இருந்தார். நீங்களும் படிப்பது போல நடிப்பது, படிப்பது போல பாவனை செய்வது என உங்களை நீங்களே ஏமாற்றிக் கொள்ளாமல் படிப்பில் உண்மையாய் இருங்கள்.

"உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான்" (நீதி. 28:20).

**5. இணைந்து ஜெபம் பண்ணுங்கள்: (PRAY TOGETHER) தானி 2:17**

தானியேல் வாழ்க்கையில் வெற்றியுள்ளவராக இருந்ததற்கு ஒரு முக்கிய காரணம் தன் ஆவிக்குரிய நண்பர்களோடு இணைந்து ஜெபித்தார். நீங்களும் உங்கள் பெற்றோர் அனுமதியோடும், போதகர் அனுமதியோடும் உங்கள் ஆவிக்குரிய நண்பர்களோடு இணைந்து கருத்தாய் ஜெபம்பண்ணுங்கள்.

உண்மையாகவே உங்கள் மீது அக்கறையுள்ள நண்பர்களோடு இணைந்து நேரத்தை வீணாக்காமல் ஜெபிக்கிறவர்களாக இருந்தால், நீங்கள் மட்டுமல்ல உங்களோடு இணைந்து ஜெபிக்கிறவர்களும் ஆசீர்வதிக்கப்பட்டு உயர்த்தப்படு வார்கள். தானியேல் மட்டுமல்ல தானியேலின் நண்பர்களும் வெற்றியுள்ளவர்களாக இருந்தார்கள் என வேதத்தில் வாசிக்கிறோம்.

ஒரு பறவை மரத்தின் கிளையில் அமரும்போது அது எந்த நேத்திலும்
முறிந்து விழும் என்ற பயத்தில் அமருவதில்லை. ஏனென்றால்
பறவை நம்புவது கிளையை அல்ல அதன் சிறகுகளையே.

பறவைக்கு சிறகு போல உங்களுக்கு உங்களோடிருக்கிற ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும், அவர் தருகிற ஞானமும் தைரியமும் தானியேலையும் அவர் நண்பர்களையும் வெற்றி சிறக்க பண்ணினதுபோல உங்களையும் வெற்றி சிறக்கப்பண்ணும்.

உங்கள் ஆண்டு இறுதித் தேர்வில் வெற்றி பெற வாழ்த்துகிறோம், உங்களுக்காக ஜெபிக்கிறோம். ஆண்டவர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

---

34-ம் பக்கத் தொடர்ச்சி

நட்பு என்பது என்டர்டைமண்ட் பண்ணுவதற்காக அல்ல, நட்பு என்பது எல்லா நிலையிலும் துணை நிற்பதற்காகவே. ஆகவே தான் இயேசு கிறிஸ்து தனக்கு சீஷர்களை தெரிவு செய்யும் முன்பாக இரவு முழுவதும் ஜெபித்தார் (லூக்.6:12,13) நாமும் நம் நண்பர்களை ஜெபத்தோடும், ஞானத்தோடும் தெரிவு செய்வது மிக அவசியமானதாகும்.

எல்லாவற்றையும் சோதித்துப்பார்த்து, நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள். பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டுவிலகுங்கள். (1தெச. 5:21, 22)

இந்த பகுதி உங்களுக்கு பிரயோஜனமாக இருந்திருக்கும் என நம்புகிறேன். உங்கள் மேலான கருத்துக்களை 97503 81784 என்ற எண்ணிற்கு குறுஞ்செய்தி மூலம் தெரியப்படுத்துங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.. அடுத்த இதழில் உங்களை மறுபடியும் சந்திக்கிறேன்.. டாட்டா...

சிறுவர் பகுதி



# தெரிஞ்சுக்கோ புரிஞ்சுக்கோ


## பாஸ்டர். பெவிஸ்டன்

பூரண கிருபை ஏ.ஜி சபை, கருப்பாயூரணி, மதுரை-20

Contributing Editor, Paripoorana Jeevan


ஹாய் குட்டீஸ்.. எல்லாரும் எப்படியிருக்கிறீங்க? பரிபூரண ஜீவன் சிறுவர் பகுதிக்கு நீங்கள் கொடுத்துவரும் மேலான ஆதரவை உங்கள் கருத்துக்கள் மூலம் அறிந்து தேவனை துதிக்கிறேன். இந்த மாதமும் ஒரு வித்தியாசமான நபருடைய உண்மை சம்பவத்தை உங்களோடு பகிர்ந்து கொள்ளப்போகிறேன்.. வாங்க கதைக்குள்ள போகலாம்.

ஒரு நாள் நள்ளிரவில் தேசிய நெடுஞ்சாலையில் நண்பர்களுடன் வாடகை காரில் பயணம் செய்து கொண்டிருந்தோம். காரில் ஓட்டுநர் இருக்கைக்கு பக்கத்து இருக்கையில் உட்கார்ந்திருந்த எனது நண்பர் குறட்டை விட்டு தூங்க ஆரம்பித்தார். ஒரு சில நிமிடங்களில் திடீரென கரை நிறுத்திய ஓட்டுநர், தூங்கிக்கொண்டிருந்த என் நண்பரை எழுப்பி, “கொஞ்சம் பின்னால் சென்று அமருங்கள், நீங்கள் தூங்கி வழிவதை பார்த்தால் எனக்கும் தூக்கம் வருகிறது” என்றவுடன் நண்பர் முனகிக்கொண்டு பின் இருக்கையில் வந்து அமர்ந்து மீண்டும் தூங்க ஆரம்பித்தார்.

நான் தூக்கம் வராமல் ஓட்டுநர் சொன்னதையே யோசித்துக் கொண்டிருந்தேன். எவ்வளவு பெரிய தத்துவத்தை எவ்வளவு எளிதாக சொல்லிவிட்டு தன் பணியை தொடர்ந்து கொண்டிருக்கிறார் இந்த ஓட்டுநர். ஆம் அவர் சொன்னது மிக பெரிய விஷயம் தான்.

நம் குணம், சிந்தனை, செயல் போன்றவை பல நேரங்களில் நம்மை சுற்றி இருப்பவர்களை பொறுத்தே அமைகிறது. தேனீக்கள் போல நாள் முழுவதும் சுறுசுறுப்பாக சுற்றி சுழன்று கொண்டிருக்கும் நண்பர் பக்கத்தில் இருக்கும் போது, இயல்பாகவே நம் உடலில் சுறுசுறுப்பு தொற்றிக்கொள்கிறது. அதேநேரம், உருப்படியாக ஒரு வேலையும் செய்யாமல், சதா புலம்பிக்கொண்டு வீணாக பொழுதை கழித்துக்கொண்டிருப்பவர் பக்கத்தில் இருக்கும் போது, நம்மையும் அறியாமல் சோம்பேறியாக மாறிவிடுகிறோம். இந்த காரணத்திற்காக தான் வாகனம் ஓட்டும் போது தூங்குபவர்களை பக்கத்தில் வைத்துக்கொள்ள ஓட்டுனர்கள் விரும்புவதில்லை. எவ்வளவு பெரிய உளவியல் உண்மை அது!

“உன் நண்பனைச் சொல், உன்னைப் பற்றி சொல்கிறேன்” என்பது பழமொழி அல்ல, அது நம் வாழ்வின் மொழி. நம் வீட்டிலோ, படிக்கும் இடத்திலோ எதிர்மறை எண்ணம் கொண்ட சிலரை பிடித்தோ பிடிக்காமலேயோ சந்திக்க நேரிடும். அவர்களிடம் கவனமாக இருங்கள். உங்களிடம் ஒட்டிக்கொண்டிருக்கும் கொஞ்சம் சுறு சுறுப்பு கூட அவர்களால் கெட்டுப் போகும் பேராபத்து இருக்கிறது.

செய்ய வேண்டியதை செய்ய வேண்டிய நேரத்தில், செய்ய வேண்டிய விதத்தில், செய்ய தவறுபவர்கள் கிடைக்கும் வாய்ப்புகளை அலட்சியப் படுத்துபவர்கள், நாகரீகம் என்ற பெயரில் மரியாதையை மறந்தவர்கள், தங்கள் அகத்தைவிட புற அலங்காரத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்வர்கள், எதிர்மறை எண்ணம் கொண்டவர்கள், தவறுகளை ஊக்குவிப்பவர்கள், விரக்தி எண்ணம் கொண்டவர்கள், வாழ்க்கை மீது நம்பிக்கை இழந்தவர்கள், கீழ்படியாமையை கெத்து என்பவர்கள், விமர்சனம் என்ற பெயரில் சதா குறையும், பொய்யும் கூறுபவர்களிடம் நாம் விலகி இருக்க வேண்டியது மிக மிக அவசியமானதாகும்.

இன்றைய மாணவ சமூகத்திற்கு இதனை குறித்த சரியான புரிதல் இல்லாமையால் எல்லாரிடமும் ஒரே மனநிலையில் பழகுகின்றனர். இதன் விளைவு என்ன? தொற்றுநோய் போல சில தவறான பழக்கங்கள் ஒட்டிக்கொள்ளுகிறது. வாழ்வின் அழகிய பக்கங்கள் இவர்களது அனுமதியின்றி பலரால் கிறுக்கப்படுகிறது. அனைத்து திறமைகளையும் ஆப்லைனில் வைத்துவிட்டு, சிறகொடிந்த பறவையை போல ஆன்லைனில் முடங்கி போய்விடுகிறார்கள்.

நீங்கள் வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டுமென்றால், முதலில் உங்களை சுற்றி இருப்பவர்கள் யார் என சிந்தியுங்கள். சுறுசுறுப்பானவரா?, நேர்மறையான எண்ணம் கொண்டவரா?, கடவுள் பயம் உள்ளவரா? தவறுகளுக்கு உடன்படாதவரா?, நன்றாக படிப்பவரா? என பல கேள்விகளை உங்களுக்குள் கேட்டுப்பாருங்கள். காரணம் "நாம் யாரோடு அதிக நேரம் செலவிடுகிறோமோ அவர்களை போலவே மாறுகிறோம்" என்பது தான் உளவில் உண்மை.

தக்க நேரத்தில் எடுத்து சொல்லி நம்பிக்கையூட்ட நல்ல மனிதர்கள் இல்லாததால் வாழ்க்கையில் தோற்றவர்கள் பலர் உண்டு. பெரிய பெரிய சாம்ராஜ்யங்கள் கூட தங்கள் பக்கத்தில் இருந்த தவறான எண்ணம் கொண்டவர்களால் சரிந்து போயிருக்கின்றன. எனவே வாழ்க்கையில் வெற்றி பெற உங்களை சுற்றி சரியான நண்பர்களை வைத்துக்கொள்வது அவசியம்.

சிறுவர் பகுதி தொடர்ச்சி 32-ம் பக்கம் பார்க்கவும்

## இயேசுவின் விலையேறப் பெற்ற இரத்தத்தின் ஆசீர்வாதங்கள்



1. இயேசுவின் இரத்தத்தின் மூலம் நமக்கு மீட்பும் பாவ மன்னிப்பும் கிடைக்கிறது (1 பேதுரு 1:18,19; கொலோ.1:14; எபே. 1:7; எபி. 9:12).
2. இயேசுவின் இரத்தத்தின் மூலம் நாம் தேவனுக்கு சமீபமாகிறோம் (எபே. 2:11-13).
3. இயேசுவின் இரத்தம் நம்மை பாவங்களறக் கழுவி சுத்திகரிக்கிறது (வெளி.1:5; 1யோவான் 1:7).
4. இயேசுவின் இரத்தத்தின் மூலம் நாம் தேவனுக்கு முன்பாக இராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கப்படுகிறோம் (வெளி. 1:5).
5. இயேசுவின் இரத்தத்தின் மூலம் நமக்கு சமாதானம் உண்டாகிறது (கொலோ. 1:20).
6. இயேசுவின் இரத்தத்தின் மூலம் நாம் சாத்தானை ஜெயிக்கிறோம் (வெளி. 12 : 11).
7. இயேசுவின் இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு நம்முடைய மனச்சாட்சியை செத்த கிரியைகளறச் சுத்திகரிக்கிறது (எபி. 9 : 14).
8. இயேசுவின் இரத்தம் தேவனுடைய பரிசுத்த சந்நிதிக்குள் பிரவேசிப்பதற்கு நமக்கு தைரியத்தை கொடுக்கிறது (எபி. 10:19, 20).
9. இயேசுவின் நித்திய உடன்படிக்கையின் இரத்தம் நம்மை சகலவித நற்கிரியையிலும் சீர்பொருந்தினவர்களாக்குகிறது (எபி.13:20, 21).
10. இயேசுவின் இரத்தம் நம்மை நீதிமான்களாக மாற்றி, தேவனுடைய கோபாக்கினைக்கு நீக்கி நம்மை இரட்சிக்கிறது (ரோமர் 5:9).



# Grow-Go-Get Ready

**Rev. D. சாலமோன்**

தலைவர், கிறிஸ்துவின் ஸ்தானிகர்கள் வாலிபர் ஊழியம்

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே! இளவயதின் அதிபதி இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் கிறிஸ்துவின் ஸ்தானிகர் CA ஊழியங்கள் சார்பில் அன்பின் வாழ்த்துக்கள்.

ஜனவரி 15,16,17 ஆகிய நாட்களில் "நிலைத்து நில்-Stand Steadfast" என்ற தலைப்பில் 56-வது மத்திய வாலிபர் முகாம் மதுரையில் உள்ள AG Camp Site-ல் வைத்து தேவனுடைய அற்புத கிருபையால் மிகவும் ஆசீர்வாதமாக நடைபெற்றது. தேவனுக்கே மகிமை உண்டாவதாக! ஜெபித்த, பங்கெடுத்த அனைவருக்கும் நன்றி தெரிவிக்கிறோம்.

2023-ல் 3G's என்ற தலைப்பில் தேவனுடைய விருப்பங்களை பற்றிய வார்த்தைகள்

**1.Grow in the likeness of Jesus Christ : கிறிஸ்துவின் சாயலில் வளருங்கள்**

ஆதாம் தேவனுடைய வார்த்தையால் உண்டாக்கப்பட்டவன், கொடுக்கப்பட்ட சுதந்திரத்தை தவறாக பயன்படுத்தியதால் தேவ சாயலை இழந்து போனான். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இழந்துபோனதை தேடவும், இரட்சிக்கவுமே உலகத்தில் வந்து தேவனுடைய சாயலை மீட்டு எடுத்தார் (லூக்கா 19:10). இயேசு கிறிஸ்துவின் இரட்சிப்பு மூலம் அது சாத்தியமானது. "இரட்சிப்பு" என்பது கிறிஸ்து நம்மில் வாழ்வதாகும்.

வாழ்க்கை என்பது பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடையே உள்ள காலம் ஆகும். Life is between two C's-Cradle and Coffin. உலகில் வாழும் வாழ்வு அர்த்தமுள்ளதாய், நிறைவுள்ளதாய், கனியுள்ளதாய் இருக்க தேவனுடைய சாயலில் நீங்கள் வளர வேண்டும் (ரோமர் 8:16; தீத்து 3:14). தேவனுடைய சாயல் என்பது வெளித்தோற்றம் அல்ல, மாறாக இரட்சிக்கப்பட்டதின் வாழ்க்கை மாற்றம். தேவனுடைய சாயலில் ஒருவரின் வாழ்வை கீழ்காண்பவை மூலம் அறிந்து கொள்ளலாம்.

What you are crazy about? இந்த சமுதாயத்தில் வாலிபர்கள் "மாயைக்கு (Vanity) கீழ்பட்டிருக்கிறார்கள். மாயை என்றால் நீர்க்குமிழ்களின் வெடிப்பு Just bursting of bubbles". சமூகத்தில் பிரபல்யம் ஆகும் தீவிரம். Crazy for social media gadgets, சிற்றின்பம் ஆகியவற்றின் மேல் பசிதாகமாக இருக்கிறார்கள். கிறிஸ்துவின் சாயல் என்பது நீதியின் மேல் உள்ள பசிதாகம், இயேசு கிறிஸ்துவை மையமாக கொண்டு ஆசை, தெரிந்தெடுப்பு, தீர்மானம் கிறிஸ்துவின் சாயலின் அடையாளங்களாகும்.

விசுவாசத்தில், தீர்மானத்தில் நிலைத்திருக்கும் தன்மை, எபி.3:14;10:35, எதிர்மறையான காரியங்களை வாழ்வில் சந்திக்கும்போது (எகா.) பற்றாக்குறை உபத்திரவங்கள், மன்னிப்பு, இழப்புகள் ஆகிய சூழ்நிலையில் கிறிஸ்துவின் அன்பை விட்டு என்னை பிரிப்பவன் யார்? என்ற நேர்நிலை எண்ணத்தோடு வாழ்தல் கிறிஸ்துவின் சாயலின் அடையாளங்கள்.

உங்கள் உழைப்பில் ஒரு பகுதியை ஆண்டவருக்கு கொடுத்து தேவராஜ்யத்தின் ஊழியம் மிக சிறப்போடு நடந்தேற உங்கள் உதாரத்துவமாக கொடுக்கும் குணம் கிறிஸ்துவின் சாயலின் அடையாளங்கள். சீர்கேடுகளை கலாச்சாரமாக கொண்டுள்ள இந்த சமுதாயத்தில் கிறிஸ்துவின் சாயலில் வளருவதை சவாலாக கொண்டு வாழ தேவன் உங்களை ஏவுகிறார். கிறிஸ்துவின் சாயலில் வளர்வதே இந்த பூமியில் உங்கள் செல்வாக்கு!

### 2.Go with His Purpose : தேவனுடைய காரியமாக செல்லுங்கள்

தேவனுடைய நோக்கம் பொதுவானதாகவும் பிரத்தியேகமாகவும் (Universal purpose as well unique purpose) இருப்பதை காண்கிறோம். இயேசு கிறிஸ்து 12 சீஷர்களை உருவாக்கியதை போல நீங்களும் உங்கள் நண்பர்களில் 12 பெயர்களை எழுதி அவர்கள் இரட்சிக்கப்பட பிரயாசப்படுங்கள். அப்போஸ்தலர் 1:8-ல் நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்து பரலோகம் செல்லும் முன் இறுதியாக மிக பெரிய பொறுப்பை அவருடைய சீஷர்களுக்கு கொடுத்து சென்றார். இக்காலத்தில் வாழ்கின்ற நம்மனைவருக்கும் அதுவே முதல் பொறுப்பாக வேண்டும்.

இந்தியாவில் இளைஞர்கள் 1977-2012 ஆம் ஆண்டு இடைவெளியில் பிறந்தவர்களை **"Gen Z"** என அடையாளப்படுத்தப்படுகிறார்கள். அதன்படி 11 வயது முதல் 26 வயதின் கீழ் உள்ள வாலிபர்கள் மிகப்பெரும்பான்மையான தொகையில் உள்ளனர். அவர்கள் இரட்சிக்கப்பட, விசாரிக்கப்பட, சீஷராக்கும் பொறுப்போடு வாழ்தல் நமக்கு அவசியம். ஆண்டவரின் இறுதி கட்டளையை சீஷர்கள் தாங்கள் வாழும் இடத்தில் இருந்து துவங்கியது போல, நீங்களும் முதலாவது நீங்கள் வாழ்கின்ற, படிக்கிற, வேலை செய்யும் இடத்தில் உள்ள பேச்சு மற்றும் செயலால், கிறிஸ்துவின் சிலுவை பாடுகள், மரணம், உயிர்த்தெழுதலை நினைவு கூறும் நாட்களில் தீவிரமாய் கிறிஸ்துவின் நோக்கத்தை நிறைவேற்றுங்கள்.

### 3.Get ready : ஆயத்தப்படுங்கள்!

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வருகையைக் குறித்து பரிசுத்த வேதாகமத்தில் தரிசனங்கள், உபதேசங்கள், உவமைகள் மூலம் பேசப்பட்டிருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை எப்போது என குறிப்பிடவில்லை. ஆனால் அநேக அடையாளங்களால் எச்சரிக்கை கொடுக்கப் பட்டுள்ளது. கிறிஸ்துவின் வருகையை குறித்து முரண்பாடான கருத்துக்கள், எண்ணங்கள் திருச்சபை மக்கள் மத்தியில் நிலவி வருகிறது. வெளி. 3:20-ன் வசனத்தின்படி ஆண்டவரின் வருகை மிக சமீபம்.

இந்த முழு உலகமும் அந்தி கிறிஸ்துவை வரவேற்க ஆயத்தமாகும் நிலையில் திருச்சபையானது இயேசு கிறிஸ்துவை சந்திக்க ஆயத்தமாகுதல் அவசியம். அவரது வருகையில் கைவிடப்படுவதை போல மிக வேதனையானது. இந்த பூமியில் ஏதுமில்லை. லூக்கா 19:12-21 ஆகிய வசனத்தில், பிரபு தன் ஊழியக்காரர்களோடு இல்லாத காலத்தில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை உவமையின் மூலம் மிகத் தெளிவாக இயேசு கிறிஸ்து போதித்திருக்கிறார். நீங்களும் உண்மையும் உத்தமமுள்ளவர்களாய் (Faithful and Fruitful) வாழ்ந்து அவர் வருகையை எதிர்கொள்ளுங்கள். உங்கள் (Chronos) வாழ் நாட்களை வீணாக்காதீர்கள்!. உங்கள் வாழ்நாளில் (Kairos) பரிசுத்த ஆவியானவரின் கிரியையை தவறவிடாதீர்கள்! (Don't waste the Chronos and don't miss the Kairos.



# இயேசுவைப்போல் வளருதல்

## (Growing up like JESUS)


Rev. பெகின் சாமுவேல்

இயக்குநர், தமிழ் பிரதேச சிறுவர் ஊழியங்கள்


ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் பரிபூரண ஜீவன் வாசகர்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த இதழ்வாயிலாக உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இந்த இதழிலும் தேவன் நமது தமிழ்ப்பிரதேச சிறுவர் ஊழியங்களுக்கு கொடுத்த வாக்குத்தத்தத்தை உங்களோடு பகிர்ந்துகொள்வதில் மிக்க சந்தோஷம் அடைகிறேன். **பிள்ளை வளர்ந்து, ஆவியிலே பெலன்கொண்டு, ஞானத்தினால் நிறைந்தது. தேவனுடைய கிருபையும் அவர்மேல் (பிள்ளைமேல்) இருந்தது** (லூக்கா 2:40). இந்த வருடத்திலும் நம் பிள்ளைகள் இயேசுவைப் போல வளரப் போகிறார்கள்.

ஒரு குழந்தை பிறந்தவுடன் அனைவரும் மகிழ்ச்சியடைவது இயல்பு. ஆனால் அந்த குழந்தை தன்னில் எந்த ஒரு வளர்ச்சியும் இல்லாது சில மாதங்களாக பிறந்த வண்ணமாகவே இருந்தால் அதற்கு ஏதோ ஒரு குறைபாடு இருப்பதாக நாம் கருத்தில் கொண்டு, கவலை அடைவோம். இந்த ஆண்டிலும் தேவன் நமக்கு கொடுத்த வாக்குத்தத்தத்தில் நான்கு விதமான வளர்ச்சியைக் குறித்து குறிப்பிட்டுள்ளார். அவைகள் ஒவ்வொன்றாக நாம் தியானிக்கலாம். பிள்ளைகள் இந்த நான்கு காரியங்களிலும் வளர்ச்சி அடைய நாம் ஜெபிப்போம்.

### 1. உடல்ரீதியான வளர்ச்சி (Physically)

நாம் வாசிக்கிறோம் பிள்ளை வளர்ந்து... இயேசு சரீரப்பிரகாரமான வளர்ச்சி உடையவராக இருந்தார். அவருடைய வயதுக்கேற்ற வளர்ச்சி அந்தந்த காலத்தில் அவருக்கு காணப்பட்டது. வளர்ச்சியுள்ளவர்களே பூரணமானவர்களாக கருதப்படுவர். யோவானைப் பற்றியும் லூக்கா 1:80 ல் அந்தப் பிள்ளை வளர்ந்து.. என்று வாசிக்கிறோம். சரீரப்பிரகாரமான வளர்ச்சி அனைவராலும் பார்க்கக்கூடியது. தேவன் நம் பிள்ளைகளை சரியான வளர்ச்சியோடு காணப்பட உதவுவாராக.

### 2. ஆவிக்குரிய வளர்ச்சி (Spiritually)

அடுத்ததாக பிள்ளை ஆவியிலே பெலன்கொண்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எப்படி ஆவிக்குரிய பெலனை பெற்றுக்கொள்ள முடியும்? பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து... (அப்1:8). பெலிஸ்தியனாகிய கோலியாத் கையிலுள்ள ஈட்டி ஒரு பனைமரத்தை இரண்டாக பிளந்தால் எப்படி இருக்குமோ அப்படி இருந்தது. ஆனால் அவனை எதிர்த்து சென்ற தாவீது மாம்ச புயத்தோடும், பலத்தோடும் செல்லவில்லை. கர்த்தருடைய பலத்தோடு போகிறான். ஏனெனில் கர்த்தரே நம் ஆவி, ஆத்துமா, சரீரங்களில் பெலன் தருகிறவர். உங்கள் பிள்ளைகள் ஒவ்வொருவரும் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்று, சத்துருவை எதிர்த்து நிற்க, ஆவியில் பெலனடைவார்கள் ஆக.

### 3. மனரீதியான வளர்ச்சி (Mentally)

பிள்ளை ஞானத்தினால் நிறைந்திருந்தது. எப்படி இந்த ஞானம் கிடைத்தது? தேவனுடைய ஞானத்தைப் பெற வழி என்ன? கர்த்தருடைய வசனம். இயேசு

நியாயப்பிரமாண புஸ்தகத்தை அதிகமாய் வாசித்து அதில் தேறியிருந்தார். தேவாலயத்தில் அவர் பேசுகிறதைக் கேட்ட யாவரும் அவருடைய புத்தியையும், அவர் சொன்ன மாறுத்தரங்களையுங்குறித்துப் பிரமித்தார்கள். (லூக்கா 2:47) பிள்ளைகள் வேத வசனத்தை வாசிக்கும்போது, தியானிக்கும்போது கர்த்தர் அவர்களை ஞானமுள்ளவர்களாக்குகிறார். முதிர்வயதுள்ளவர்களைக் காட்டிலும், அவர்களுக்கு கற்றுக்கொடுக்கிறவர்களைக் காட்டிலும் நம் பிள்ளைகளை தேவன் ஞானமுள்ளவர் களாக்குவார். வேதத்தை வாசிக்க பிள்ளைகளை ஊக்கப்படுத்துங்கள்.

### 4. சமூக ரீதியான வளர்ச்சி (Socially)

இறுதியாக, தேவனுடைய கிருபையும் அவர்மேல் இருந்தது. இன்றைக்கு நாம் வாழும் உலகத்தில் வன்முறையும் கலகமும் விஷம் போல் பரவியிருக்கிறது. சிறுபிள்ளைகளுக்காக தயாரிக்கப்படும் பொழுதுபோக்குகளான கார்ட்டூன், வீடியோ கேம்ஸ் என்று எங்கு பார்த்தாலும் அசுத்தங்கள் நிறைந்திருக்கிறது.. இதிலிருந்து தப்பித்து பரிசுத்தமாய் நம் பிள்ளைகள் வாழ தேவ கிருபை மிக அவசியம். நோவா வாழ்ந்த நாட்களில் உலகம் முழுவதும் பாவத்தால் அசுத்தமாக்கப்பட்டு தேவ கோபாக்கினைக்கு நேராய் ஆனபோதும் நோவாவுக்கும் அவனுடைய பிள்ளைகளுக்கும் கர்த்தருடைய கிருபை கிடைத்தது. அழிவிலிருந்து தப்பித்துக் கொண்டனர். தேவகிருபையில் நம் பிள்ளைகள் அதிகமதிகமாய் வளர தேவனை நோக்கி கெஞ்சுவோம். கர்த்தர் தாமே நம் பிள்ளைகள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக.

அன்பானவர்களே, இந்த வருடத்திற்கான விடுமுறை நாட்களில் நடைபெற இருக்கும் **AGVBS** ஆயத்த வேலைகள் ஆரம்பமாகி, நடந்து கொண்டிருக்கிறது. தேவ வழிநடத்துதலின்படி இந்த வருட **AGVBS** க்கான தலைப்பு **Freedom** என்று தெரிந்தெடுக்கப்பட்டு, அதற்கான பாடத்திட்டங்கள், பாடல்கள் ஆயத்தமாகிக் கொண்டிருக்கின்றன. விரைவில் உங்களை சந்திக்க இருக்கிறோம். இந்த ஊழியங்களுக்காக நீங்கள் ஜெபித்துக்கொள்ளுங்கள்.

## AGVBS'23 TRAINING CENTRES

| | | | |
|---|---|---|---|
| 20/03/2023 MONDAY | TRICHY CITY AG CHURCH, PONNAGAR, TRICHY | 25/03/2023 SATURDAY | AG CHURCH, THENNANJALAI ROAD PONDICHERRY. |
| 21/03/2023 TUESDAY | AG CHURCH, GANDHI NAGAR, VELLORE. | 28/03/2023 TUESDAY | AG CHURCH, MAMANGAM SALEM |
| 22/03/2023 WEDNESDAY | AG CHURCH, LAKE AVENUE, CHENGALPET. | 29/03/2023 WEDNESDAY | GRACE AG CHURCH, THUDIYALUR, COIMBATORE |
| 23/03/2023 THURSDAY | AG CHURCH, NERKUNDRAM, CHENNAI | 30/03/2023 THURSDAY | AG CHURCH, KOODAL NAGAR MADURAI |
| 24/03/2023 FRIDAY | AG HOPE CENTRE, PALLIKARANAI, CHENNAI | 31/03/2023 FRIDAY | SMYRNA AG CHURCH VANNARPETTAI TIRUNELVELI |
| 1/04/2023 (SATURDAY) A.G. CHURCH, MATTAKADAI, TUTICORIN. | | | |

## போட்டி எண் : 97 (சரியான விடை எழுதியவர்கள்)

**செங்கோட்டை:**M.ரமணி;S.முத்துலெட்சுமி;V.சித்ரா பிளஸ்சி;L.குளோரி; S.அமுதா கிட்டு; V.பியூலா; M.ராஜேஸ்வரி; V.ஐஸ்வர்யா; N.K.கோகிலா; R.மாது; M.தங்கமணி; T.கலா; K.பூங்கோதை ; S.பிரேமலதா; S.பிரியா; A.கிறிஸ்டி; கிரிஜா; E.கலா; ஜெயசீலின்; மகேஷ்வரி; லின்ஸி; J.சுமதி; G.முத்துலெட்சுமி; விஜி; ராணி பிளசிங்; மௌலி; மயில்; மரகதம்; K.சாராள்; A.மஞ்சு; T.சாராள்; V.செல்வி;|**எடப்பாடி** : மரகதவள்ளி; அரசு அஞ்சலி; ரூத்;|**சேத்துப்பட்டு** : J.லெட்சுமிகந்தா; R.அமல செல்வி; ரெக்ஸி; V.ஜெபா ஹெலன்; S.சுகந்தி சாம்சன்;|**கள்ளக்குறிச்சி**:R.செல்வராஜ்;P.தனம்;V.ஜெனிடா;ஜெயபிரகாஷ்; ;|**ஸ்ரீவில்லிபுத்தூர் :**G.அனிதா;குளோரி; R.காபிரியேல்;|**சுரண்டை:**குளோரி ஞானம்;| **ஆத்தூர்:**M.கண்ணகி; G.லில்லி; S.டெல்பின்; E.பிளாரன்ஸ்;|**வால்பாறை:**M.வளர்மதி; **பழையகாயல்:** S.கிருபா பிளஸ்ஸி;|**மடத்துக்குளம்** : S.சேர்மக்கனி; கிரேஸ்மேரி; சரண்யா; A.ஸ்டெல்லா மேரி; P.பிரீத்தி; |**கவர்க்கல் :** டானியேல்**;** |**திருநின்றவூர்** : எழிலரசி; அனிதா; ரோஸ்லின் மேரி; P.சகுந்தலா பாண்டியன்; N.சாதனா; அனுலா; D.பிரேமா; ஹேமலதா; S.சரண்யா; F.எஸ்தர் பவானி; P.புவனேஸ்வரி; K.மார்த்தாள் சாம்;|**பெருந்துறை** : P.ஜெனிபர்; P.ஹெப்சிபா; M.கெத்சியாள்;|**கோயம்புத்தூர்** : சங்கீதா; S.கிறிஸ்டினா;|**ஓசூர்** : ஜீவா; S.ஸ்ரேயா; R.ஜெமிந்தா;|**புளியங்குடி**:ஜெய ஞானம்;P.எஸ்தர் ராணி; ஏஞ்சல் கிளாட்சன்; Y.ஞானமணி;|**ஆறுமுகநேரி**:விஜிதா எஸ்தர்; E.பிரைஸி; B.ரூபி புவனா; கோபி; பூபதி; L.ஐசக் சாலமோன்; அந்தோணி சஞ்சய்; F.சாலமோன் அபிஷேக்; S.இருதய ஸ்டெர்லின்; G.ஜோதி மீனா; S.அன்சி ரத்னம்; M.சுஷ்மிதா; A.விகான்சி ரேகா; P.பனிமலர்; T.டைனிஷியா; T.சுகிர்தா டைட்டஸ்;|**அச்சிறுப்பாக்கம்** : A.செல்வகுமாரி; J.ஜென்ஸி; சுதா சார்லின்; P.திரேசா; S.ரேஷ்மா சாம்ராஜ்; தமிழ்ச்செல்வி;|**சின்னாளப்பட்டி** : M.சலோமி;|**இறச்சகுளம்** : R.சிவா; G.கனகமணி; V.ராதிகா; P.எஸ்தர்; V.நளினா ஷாலினி; J.மகிழ் ஜெயந்தி; M.கலா ;|**விநாயகபுரம் (ஆத்தூர்):** எ.மகாலட்சுமி;|**சாத்தூர்**:J.சங்கீதா; சரோஜா;| **நாகலாபுரம்**:N.சாராள்;|**நாகமலை**: M.ஆனந்தி;|**நாகப்பட்டினம்:**J.வின்செனட் ராஜ்;|**கம்பம்**:ஜோதிமணி;|**தர்மபுரி** : ரூத்; A.ஜாஸ்மின்;|**மருதம் புத்தூர்** : அனிதா மேரி;|**கடலையூர்** : M.ஆபிரகாம்;|**வடக்கு ஆத்தூர்**: ரூத் பாக்கியவதி;|**வில்லியனூர்** : புரோனிக்கா; எஸ்தர் சுரேஷ்; மல்லிகா;|**அரும்பாக்கம்** : முத்துலஷ்மி;|**வீரபாண்டியன் பட்டினம்** : அலீஸ்;|**திண்டிவனம்** : சாராள் அறிவுச்செல்வி;|**வலசரவாக்கம்** : நிர்மலா எஸ்தர்;|**சென்னை** : மெர்லின் ஹெலன்; A.அம்மணி; வசந்தா டேவிட்; V.மரகத லீலா;|**கொட்டிவாக்கம்**: அஞ்சலி;|**திருவண்ணாமலை**: S.சுகுணா; **களக்காடு**:T.ரெக்ஸின்; P.விமலா பாய்;|**ஓட்டப்பிடாரம்** : T.மரியநேசம்; S.புஷ்பராணி;| **திருச்சி** : யாத்ரா; K.சாந்தி; S.கணபதி;|**தூத்துக்குடி** : பெனியூசியா; சில்வெஸ்டர்; புருசிமா; |**இச்சிப்பாளையம்** : கிறிஸ்டல் ஜான்; ;|**சேலம் :** D.விஜய்;|**ஈரோடு (கோபி) :** P.S.ருக்மணி;J.ஜெப்ரின் இம்மானுவேல்;|**தேனி:** S.தனம்; J.கிருபா; G.பூமணி ஜான்சி; A.திரவியச் செல்வி; கார்த்திகேயாயிணி;|**பெருங்குளம்** : J.ஜெயலின் சிங்; S.பவித்ரா;|**நெல்வாய்** : K.கலையரசி; வெஸ்லி விஜயகுமார்; பிளஸ்ஸி இன்பக்கனி; D.அருணா; V.அமலா;|**தஞ்சாவூர்** : M.தேவகுமார்;|**பழனி**: V.லெட்சுமி;|**நாசரேத்**: G.மகாலெட்சுமி; G.எஸ்தர்; G.மதன்;|**வத்ராப்**: S.சிவகாமி; S.ஜெஸ்ஸி;|**ஆண்டிபட்டி** : J.மேரி;|**ஆலங்குளம் (வி)** : R.V.பிளாரன்ஸ்; கிருபா; ஸ்டெல்லா மேரி;|**நீலகிரி**: சி.புஸ்பமாலா;|**பாபநாசம்** : S.வீரபாகு;|**மதுரை** : S.கிரேஸ் சைமன்; ஜெயகுட்டி ஞானபாய்; N.நற்குணம் மேரி;|**அரியலூர்**: S.நியுஜிலின்;|**திருவள்ளூர்**: M.மாலதி; **அகஸ்தியர்பட்டி**: S.நிர்மலா;|**பசுவந்தனை**: S.கிருபா சாலிகா;| **இடைக்கால்**: J.சித்ரா;|**கடையநல்லூர்**: M.வினோலியா;|**திருச்செந்தூர்** :A.தேவதாஸ்;|**KTCநகர்** : S.அருணா; சில்வியா கிறிஸ்டோபர்; P.சிவகாமி சாராள்;|**தேவகோட்டை**:பத்மா ஜான்சன்;|**மூக்குப்பீறி**: T.செல்லத்தாய் ராணி;|**குற்றாலம்** :R.வேளாங்கனி ராஜாமணி;|**பண்ணைவிளை**: S.ஹரிஸ்வின்;| **கீழப்பழுவூர்**: R.ஸ்டெல்லா மேரி;|**மன்னார்குடி**:ஷீபா அருண்;|**அச்சரப்பாக்கம்** : S.டாரத்தி;|**ஆம்பூர்**:D.ரூபி மனோகரன்;|**கல்லல்**:U.அபிஷாக்;|**இராமன்புதூர்** : M.லீதியாள்;|**ஆழ்வார் குறிச்சி**: R.ஹரில்லா.

## போட்டி எண் : 97 (சரியான விடைகள்)

| | | | |
|---|---|---|---|
| 1.1 தெச.3:8 | 6.2 தெச.1:6 | 4. 1 தீமோ.4:8 | 9.2 தீமோ. 4:7 |
| 2.1 தெச.1:7 | 7. 2 தெச.3:13 | 5. 1 தீமோ..6:6 | 10. 2 தீமோ.2:5 |
| 3.1 தெச.4:7 | 1. 1 தீமோ.1:5 | 6. 1 தீமோ. 5:8 | 1. தீத்து 1:15 |
| 4.1 தெச.2:10 | 2.1 தீமோ.2:4 | 7. 2 தீமோ. 1:7 | 2. தீத்து 3:5 |
| 5.1 தெச.5:21 | 3. 1 தீமோ.3:4 | 8. 2 தீமோ. 3:12 | 3. தீத்து 2:14 |

## பரிபூரண ஜீவன் போட்டி எண்-98

### பொருத்துக

### (பிலேமோன், எபிரெயர்) இருப்பிடத்துடன் விடை எழுதவும்

1. ஆபேல் - உண்மையுள்ள பணிவிடைக்காரன்
2. ஏனோக்கு - கனமான ஊழியம்
3. இயேசு கிறிஸ்து - சாலேமின் ராஜா
4. மோசே - மேன்மையான பலி
5. யோசுவா - காற்றுகள்
6. ஆபிரகாம் - எலும்புகள்
7. ஊழியர்கள் - நித்திய பிரதான ஆசாரியர்
8. மெல்கிசேதேக்கு - கர்த்தருக்கு பிரியமானவன்
9. யோசேப்பு - வாக்குத்தத்தம்
10. ஏசா - பிரயோஜனமுள்ளவன்
11. தூதர்கள் - இளைப்பாறுதல்
12. ஈசாக்கு - இருவரை ஆசீர்வதித்தவன்
13. ஆரோன் - அக்கினி ஜுவாலை
14. ஒநேசிமு - சீர்கெட்டவன்
15. யாக்கோபு - வருங்காரியங்கள்

குறிப்பு :

1. ஒரு குடும்பத்தில் ஒரு நபர் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.
2. Copy பண்ணப்பட்ட ஒரே மாதிரியான கையெழுத்துள்ள விடைகள் ஏற்றுக்கொள்ளப்படாது.
3. உங்கள் சபை ஊழியருடைய உத்தரவின்படி ஒரே Cover-ல் வருகிறதான விடை ஏற்றுக்கொள்ளப்படும்.
4. தங்கள் பெயர் மற்றும் முழு முகவரியை தெளிவாக எழுதி அனுப்பவும்.

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 5.4.2023**



### விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி

**Mrs.சாந்திபால்**
16/50 கொல்லம் மெயின் ரோடு, சீயோன் ஏ.ஜி. சர்ச்
SETC BUS டிப்போ அருகில், செங்கோட்டை - 627 809
தென்காசி (மாவட்டம்). செல் : 88077 18002

## மண்டல உபவாச ஜெபங்கள்–ஜனவரி 26








## AGCM Coordinators Meeting - Trichy






Registered News Paper Regd. No. 8206 / 62







BOOK POST

If Undelivered please return to
**PARIPOORANA JEEVAN**
30, Navalar Nagar, Madurai - 625 016. Ph: 0452 4200664